உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-ங.] விசுவாவசு஖ூ வைகாசிமீ [பகுதி-எ.

## வேளிர் வரலாறு.

[இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் நான்காம் வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1905஖ூ மேமீ 25உ காலை, சென்னைத் 'தபாலிலாகா' த்தலைவர் ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளையவர்களைச் சபாநாயகராகப்பெற்ற வித்துவசமூகத்தில், 'செந்தமிழ்' உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்களால் எழுதிப் படிக்கப்பட்டதாகும்—பத்திராசிரியர்.]

செந்தமிழ் வளர்த்த பெருமையிற் சேரசோழபாண்டியர் எவ்வளவு பாகமுடையரோ, அதற்கு அதிகமாகக் கொள்ளாது போயினும், அவரளவு சமபாகம் பெற்றுவிளங்கிய ஒரு கூட்டத்தாருமுண்டெனின் அது சிலர்க்குப்புதுமையாக இருக்கலாம். ஆனால் அடிப்பட்ட செந்தமிழ் மக்களுக்கு அது புதுமையன்று. உள்ளவாறே ஆராய்ந்தால், அம்மூவேந்தர் படைத்த தமிழ்ப் பெருமையளவு சிறக்கப்படைத்த பெருமையாளர் இக்கூட்டத்தவரென்பது தெளிவாகும். இவர்கள் தாம் வேளிர் என்றழைக்கப்படுவார்கள். இரவாமலீந்த கடையேழுவள்ளல்களிற் பலர் இவர்களே. "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங்கொடுப் பாரிலை" என்னும் அருமைத்திருவாக்குப் பெற்றவன் இக்கூட்டத்தவருள் ஒருவனேயாவன். தமிழ் வளர்த்ததனால் தானடைந்த ஒப்பற்ற புகழைக் கண்டு மூவேந்தரும் அழுக்காறுகொள்ள நின்ற வள்ளல் யார்? இவ்வாறு பெருமைபெற்றவர்களைப்பற்றிப் பொதுவாகத் தெரிந்தவிஷயங்களையன்றிச் சிறப்பாக ஆய்ந்தறியப்பட்டவை மிகச் சிலவேயாகும்.

செந்தமிழ் வளர்த்தவரென்னும் அபிமானம்பற்றிச் சேர சோழ பாண்டியரது வரலாறுகளை ஆராய்வதிற் றமிழ்மக்களால் எத்துணை முயற்சி இப்போது எடுக்கப்படுகின்றதோ, அதிற் சிறுபகுதி யளவேனும் இவ்வேளிர் விஷயத்தினும் எடுத்தல் தமிழ்மக்கள் கடனன்றோ. ஆனால் அம்முயற்சியிலிறங்கத் தக்ககருவிகள் கிடைத்தனவல்ல. வேளிரது பரம்பரைவரலாறுகளை எழுதிவைத்த பழைய நூல்களேனும் சாதனங்களேனுங் கிடையா. இப்போது காணப்படுவதெல்லாம் புறநானூறு முதலிய சில பழந்தமிழ்நூல்களிற் புலவர்கள் அவ்வக்காலங்களில் அவர்களைப்பாடிய ஒருசில செய்யுட்களேயாம். இவ்வொரு சிலவற்றைக்கொண்டு வேளிர்வரலாறெல்லாந் தெரிதல் கூடாததேயாகும். ஆயினும், வேளிர்வரலாறாகிய இருண்டசரக்கறையிற் கையிலுள்ள இச்சிறுவெளிச்சங்களைத் துணைக்கொண்டு கூடியவளவு துருவுவோம். அங்ஙனந்துருவி நோக்குவதிற் றெரிகின்றவற்றை வெளியே வைக்க முயல்வோம்.

பழைய சங்கச் செய்யுள்களில் வேளிர் என்ற ஒரு கூட்டத்தார், தமிழ்ப்பேரரசர்களாகிய சேர சோழ பாண்டியரை யடுத்துப் பலவிடங்களிற் கூறப்படுகின்றனர். இதனைப் "பண்கெழு வேந்தரும் வேளிரும்" எனப் புறநானூற்றினும், "இருபெரு வேந்தரொடு வேளிர்" என மதுரைக்காஞ்சியினும், "வேந்தரும் வேளிரும்" எனப் பதிற்றுப்பத்திற் பலவிடங்களினும் வருதலால் அறியலாம். இதனால் தமிழகத்திற் பேரரசர்களாகிய மூவேந்தரையுமடுத்து மதிக்கப்பட்ட சிற்றரசருள் இவ்வேளிர்களே முற்பட்டவர்களென்பது தெரியவரும். அன்றியும் "தொன்முதுவேளிர்" "நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிர்" "இருங்கோவேண்மருங்கு" என நூல்களிற் காணப்படுவதால் இவர்கள் பண்டைக்காலமுதலே தமிழ்நாட்டில் விளங்கியவர்களென்பதும் தேறப்படும்.

இனி, இவ்வேளிர் யாவர்? இவர் குலம் யாது? இவர் தமிழ்ப்பழங் குடிகளைச் சார்ந்தவரா அன்றி வந்தேறியவரா? இவர் புராதனநாடியாது? இவரது காலமும் வரலாறும் என்னை? என்ற விஷயங்கள் ஆராயத்தக்கன.

வேளிர் வரலாற்றைப்பற்றித் தமிழ் நாட்டில் வழங்கிய கர்ண பரம்பரைச் செய்திகள் சிலவற்றை, ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப்பாயிரவுரையில் அடியில் வரும் வாக்கியங்களிற் குறிப்பிக்கின்றார். அவையாவன:— "தேவரெல்லாங்கூடி யாஞ்சேர விருத்தலின், மேருத்தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது. அதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக் கொள்ள, அவருந் தென்றிசைக்கட்போதுகின்றவர்......துவராபதிப் போந்து, நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின் கணிருந்தனர்" என்பன. இவற்றுள்ளே 'துவராபதி நிலங்கடந்த நெடுமுடியண்ணல்' என்பது துவாரகையை உண்டாக்கி யாட்சி புரிந்தருளிய திருமாலவதாரமாகிய கண்ணபிரானையே குறிப்பதென்பது தெளிவாம். மேற்கூறிய செய்திகளுள், 'அகத்திய முனிவர் துவாரகை சென்று கண்ணபிரானது வழியினராகிய அரசரையும் வேளிரையும் தென்னாட்டிற் குடியேற்றினர்" என்பதே நாம் இங்கு எடுத்துக்கொள்ளுதற்கு உரியது. அகஸ்தியர் தென்னாடு வந்த வரலாற்றைப்பற்றிப் புராணங்களிற் சொல்லப்பட்டிருப்பதை யொத்தே பெரும்பான்மையும் மேற்செய்திகள் அமைந்துள்ளனவாயினும் கண்ணபிரான் வமிசத்தவர் பலரை அம்முனிவர் உடனழைத்து வந்தாரென்பது அப்புராணங்கட்குப் புறம்பானதாகத் தெரிகின்றது. தெரிகின்றதாயினும் அச்செய்தி அவ்வுரையாளரால் "வேந்து விணையியற்கை" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தின் அவதாரிகையிலும் "இது மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன்றொழில் உரித்தென்கின்றது." என மற்றும் ஒருமுறை எடுத்தோதிவற்புறுத்தப்பட்டுள்ளது.

இப்பிற்கூற்றில், முற்கூற்றிற் சேர்க்கப்பட்ட அருவாளரையொழித்து, ஒழிந்த நரபதியரும் வேளிருமே கண்ணபிரான் வழியினரெனவும், அவர் பதினெண்வகைக் குடியினரெனவும், அவரெல்லாம் அரசுரிமை யெய்தற்குரியவரெனவும் கூறப்படுகின்றன. இவ்

வாறு வேளிரைப்பற்றிய செய்திகளை, நச்சினார்க்கினியர் ஒருமுறைக்கு இருமுறை கூறுதலால், அவை, ஏதோஒரு தக்கஆதாரத்தைப் பற்றியே எழுந்திருத்தல் வேண்டுமென்று விளங்குகின்றது. ஆனால் அவ்வுரைகாரர் தாமெழுதுவனவற்றுக்குக் காரணமாயிருந்த மேற்கோள்களை எடுத்துக்காட்டினாரில்லை. இச்செய்திகள் மேற்கோள்களுடன் அறியப்பட்டாலன்றிப் பிற்காலத்தவரொருவர் கூற்றை மட்டும் நம்பி மேற்செல்லுதல் இயலாததாம். மேலும் துவாரகையை ஆண்ட கண்ணபிரான் வழியினர் இவ்வேளிர் என்றால் அது புதியதன்றோ! ஆதலால் நச்சினார்க்கினியர் எழுதிய இச்செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, அவற்றை உண்மையென்று காட்டவல்ல வேறுசாதனங்கள் உளவா என்பதை இனி ஆராய்ச்சி செய்வோம்.

நச்சினார்க்கினியர் கூற்றுப்படி, "வேளிர்" என்பவர் துவாரகையை யாண்ட கண்ணபிரான் வழியினராயின், அவர்களை நாம் யாதவர் என்றே அழைக்கலாம். ஏனெனில், கண்ணன்வழியினரெல்லாம் *யதுவம்சத்திற் பிறந்த சந்திரகுலத்தவரென்பது பிரசித்தமன்றோ. முற்காலத்திலேவேளிர்என்பவர் துவாரகையினின்று தென்னாட்டுக்கு வந்த யாதவர்களாயின், அவர்கள் வரலாறு பண்டைத் தண்டமிழ்நூல்களிற் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். நச்

* "யது வென்பான் பாண்டவரின்மூதாதைகளில் ஒருவனாகிய யயாதிக்கு தேவயானை வயிற்றிலுதித்த புத்திரன். இவன் வமிசம் பல்கிப் பலகிளைகளாகி, அனேக பிரசித்திபெற்ற ராஜர்களைத் தந்தது. யதுவினது மூத்தகுமாரனாகிய சகஸ்ராஜித்தினாலே ஹேஹயவமிசமாயிற்று. அவ்வமிசத்திலே கார்த்தவீரியார்ஜ்ஜுனன் என்னும் பிரசித்திபெற்ற அரசன் தோன்றினான். அவன் சந்ததியிலே தாளஜங்கர்கள் தோன்றி விளங்கினர். யதுவின் இரண்டாம் புத்திரனாகிய குரோஷ்டுஷ வமிசத்திலே பிரசித்திபெற்றவர்கள் சசிபிந்து சியாமகன் விதர்ப்பன் என்பவர்கள். இவருள் விதர்ப்பனால் விதர்ப்பராஜ வமிசம் வந்தது. விதர்ப்பன் மூன்றாம் புத்திரனாலே சேதி வமிசம் வந்தது. இரண்டாம்புத்திரன் வமிசத்தவனாகிய சாத்துவதனால் போஜவமிசமும் அந்தகவமிசமும் விருஷ்ணிகவம்சமும் வந்தன. இவற்றுள் அந்தகவமிசத்திலேதான் கண்ணபிரான் அவதரித்தது" என்பர்.

சிஞர்க்கினியரெழுத்துப்படி, அவர்கள் கண்ணபிரான் காலத்தையடுத்துத் தெற்கே வந்தேறினவராகத் தெரிதலால், அவர்கள் செய்தியை நன்ருக விளக்கக்கூடிய அக்காலத்து நூல்கள் இப்போது இறந்தன. ஆயினும், பிற்பட்ட கடைச்சங்கச்செய்யுளில் அவ்வேளிரது வரலாற்றைக் காட்டவல்ல இரண்டொரு செய்திகளும் இல்லாமற் போகவில்லை. புறநானூற்றிற் கபிலரென்னும் புலவர் இருங்கோவேள் என்பானைப் புகழுமிடத்து,

"நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே"

எனக் கூறியிருக்கும் பாடலொன்று காணப்படுகின்றது (உ0க). இதன் பொருள்:—"நீதான், வடதேசத்து முனிவரொருவரது யாகபாத்திரத்திற் றோன்றிச் செம்பாலழகாகச் செய்யப்பட்ட மிகப்பெரிய கோட்டையையுடைய வெறுத்தலில்லாத பொன்மயமாகிய துவாரகாபுரியை ஆண்டு நாற்பத்தொன்பது தலைமுறையாக வந்தவேளிர்க்குள்ளே சிறந்த வேளாயிருக்கின்ருய்" என்பதாம். இப்பழைய மேற்கோளால் வேளிர் என்பவர் துவாரகையினின்று வந்து தென்னுடாண்டவர் என்பதுமட்டில் இனிது விளங்கும். விளங்கவே, மேற்கூறிய நச்சினார்க்கினியர் செய்திகளிற் சிறந்ததொன்றற்கு பிரபலமான இலக்கியம் காணப்பட்டது.

இனி, வேளிர் துவாரகையினின்று வந்தேறியவரென்பதற்கு இலக்கியங்காணப்பட்டதாயினும், அவர் யாதவவகுப்பினரென்பதை விளக்கும்பிரமாணங்களைப் பழையதமிழ்நூல்களினின்று எடுத்தல் அரிதாகும். ஆயினும், யதுவமிசத்தவர் ஆதியில் கங்கைபாயும் நாடுகளிற் பல்கிப்பெருகியகாலத்தே, அவர்கள் குறைவின்றிச் செழித்துவாழ்தல்கருதி யாதவத்தலைவராகிய கண்ணபிரான் மேல்கடற்பக்கத்தே துவாரகையை நிருமித்து, அதனைச் சூழ்ந்திருந்த காட்டுப்பிரதேசங்களைத் திருத்தி எண்ணிறந்த யாதவர்களை அங்கே குடியேற்றித் தாம் அவர்களை ஆட்சிபுரிந்தருளினர் என்ற வரலாறு

புராணேதிகாசங்களிற் கேட்கப்படுகின்றது. கண்ணன் தன்னடிச் சோதிக்கெழுந்தருளுங்காலத்தில் இவ்யாதவர்கள் தமக்குட் பெரும் போர் புரிந்து மாண்டனரெனவும், அக்காலத்துப் பலர் வெளியேறி விட்டனரெனவும், அவ்யாதவர்கள் கோதாவிரிநதியின் தென்பிரதேசங்களினும் வியாபித்திருந்தனரெனவும் பாரதத்தால்அறியப்படுகின்றன. இவ்வரலாறுகளால், யாதவர்கள் குடியேற்றத்தில் விருப்புடையவர்களென்பதும், அவர்கள் கங்கை நாடுகளினின்றும் துவாரகையிற் குடியேறிப், பின்னர், இப்போது மகாராஷ்டிரம் என வழங்குந் தேசமுழுதும் வியாபித்தன ரென்பதும் விளக்கமாம். அவ்வாறாயின், அவ்யாதவர்கள் தாங்குடியேறிய நாட்டுக்குத் தெற்கே யிருந்த தமிழ்நாட்டுக்காடுகளை திருத்தி ஆண்டும் குடியேறினர் என்று கொள்வதில் அதிசயிக்கத்தக்கதொன்றுமில்லை. யாதவர் தெற்கேவந்த வரலாற்றைப்பற்றிய நச்சினார்க்கினியரதுசெய்திகளை முழுதும் ஆதரிக்கக்கூடிய வடநூல்மேற்கோளை நாம் காணாது போயினும், அவற்றைக்குறிப்பாகவேனும் உணர்க்கும் பிரமாணங்களும்இல்லாமற்போகவில்லை யென்பது இதனால் விளங்கும். நாம் இங்கே கூறிவந்ததற்கு உலகமதிக்கும் சரித்திரவாசிரியரொருவர் சம்மதமளித்தலையுங் காட்டுவோம். ஸ்ரீ ராமேசசந்திரதத்தர் வெளியிட்ட "சிவிலிசேஷன் ஆவ் என்ஷியன்ட் இந்தியா" என்ற அரியபெரிய நூலின் முதற்றொகுதியில் யாதவர்களைப்பற்றி எழுதப்பட்டிருப்பதன்கருத்துவருமாறு:—"கண்ணனைத் தலைமையாகக்கொண்டயாதவர்கள் மதுரையைவிட்டுவிலகிக் கூர்ச்சரத்துள்ள துவாரகையிற் குடியேறினார்கள். அங்கே அவர்கள் அதிக காலம் தங்கவில்லை. அவர்கள் தங்கட்குள்ளே கலகம் விளைக்க, (அவருட்பலர்) துவாரகையை விட்டுக் கடல்வழியே பிரயாணித்தார்கள். அங்ஙனம் பிரயாணித்தவர்கள் தென்னிந்தியாவை அடைந்து ஆங்குப் புதுராஜ்யம் ஸ்தாபித்ததாக நம்பப்படுகின்றது"* என்பதே. இப்பண்டிதர்கூறுவது நச்சினார்க்கினியரதுவேளிர் வரலாற்றோடு சில அமிசங்களில் ஒத்துள்ளமைகாணலாம். வேளிர்கள் யாதவர்களே என அறிந்து தமிழ்மக்கள் ஆங்கிலத்தில் வியாசமெழுத அதனைநோக்கி 'யாதவர் தென்னிந்தியாவில் ராஜ்ஜியம் ஸ்தாபித்ததாக நம்பப்படுகின்றது' என்று தத்தர் எழுதினரெனின், அவ்

* Dutt's Ancient India. pp. 219.

வாறு ஒரு வியாசமும் வரையப்பட்டதாகத் தெரியாமையால், அங்ஙனஞ் சொல்வதற்கில்லை. ஆதலால், அப்பண்டிதர், தென்னாட்டிற் போல, வடநாட்டில் வழங்கும் ஏதோ ஒரு கர்ணபரம்பரைச் செய்தியைப் பற்றிக்கொண்டு தமதாராய்ச்சியிற் றோன்றியதை எழுதினாரென்பதே கொள்ளத்தக்கதாம். ஆகவே, நச்சினார்க்கினியர் கூறிய செய்திக்கு வடநாட்டுப் பிரபலபண்டித ரொருவர் சம்மதமளித்தலால், கண்ணபிரான் வழியினர்பலர் தெற்கே வந்தவரலாறு குற்றமுடைத்தாகாதென்பது விளங்கும்.

இனி, வேளிர் என்பவர் வடக்கினின்று வந்த யாதவரென்பதைக் காட்ட மற்றொருசான்று முள்ளது. எறக்குறையத் தொள்ளாயிரம் வருஷங்கட்கு முன், மைசூர்நாட்டைக் கைப்படுத்தித் *துவாரசமுத்திருந்து ஆண்டவர்கள், ஒய்ஸளயாதவர்கள் என்பதைப் பலர் அறிந்திருக்கலாம். இவ்வரசர், கூர்ச்சரதேசத்துத் துவாரகையினின்றும் வந்தேறியவரென்பதும், யாதவவமிசத்தவ ரென்பதும் சரித்திர பூர்வகமாக அறியப்பட்டவையாகும். இவ்வாறு வந்தேறிய யாதவத் தலைவர்கள் 'பேலாலர்' என வழங்கப்படுகின்றனர். தமிழில்வழங்கும் வேளிர், வேளாளர் என்பனவற்றோடு இப்பேலாலபதம் ஒற்றுமை கொண்டிருத்தல் காணலாம். அன்றியும், இப்பேலாலயாதவர் காலத்தில் உண்டாக்கப்பட்ட ஒருநகரம் வேலூர் அல்லது வேளாபுரம் என அவர்பெயரால் வழங்கப்படுகின்றது. இதனால், கன்னடவடிவில் அவ்யாதவர்கள் பேலாலர் என வழங்கப்பட்டிருப்பினும், அச்சொல்லின் உண்மையுருவம் வேளாளர் எனத் தெரிதலோடு, வேள் என்னும் பெயர் வழக்கமும் அவ்யாதவர்க்கு உண்டென்பது தேறப்படும். ஸ்ரீமத். வி. கனகசபைப்பிள்ளையவர்களும், மைசூர்ப் பேலாலரையும் தமிழவேளாளரையும், யாதவர்களென்று கூறுதுபோயினும் ஒருகூட்டத்தவராகத் தமது "1800-வருஷத்துக்கு முந்திய தமிழர்" (Tamils 1800-years ago) என்னும் அரிய நூலில் விளக்குதல் காண்க. இனி, இப்பேலாலயாதவரும், பண்டைவேளிர் என்பாரும் ஒருவகுப்பினரே யென்பதை மற்றொருவழியாலுங் காட்டுவோம்.

---

* இஃது இப்போது "ஹால்பீடு" என வழங்கப்படுகின்றது.

புறநானூறு என்னுஞ் சங்கச்செய்யுளிற் கபிலரென்னும் பழையபுலவர், வேளிருள் ஒருவனாகிய இருங்கோவேள் என்பானைப் புகழுமிடத்து, அவனைத் துவாரகையினின்றும் வந்து தென்னாடாண்ட வேளிர் வழியினனென்று கூறியிருப்பதாக முன்னொருமுறை சொல்லியுள்ளோம். அவ்வேளைக்,கபிலர் தாம்பாடிய இரண்டுபாடல்களிலும் 'புலிகடிமால்' என அழைக்கின்றனர். இவ்விடத்திற் புறநானூற்றுரைகாரர் "புலிகடிமால்-இவனுக்கொருபெயர்" என்றமட்டிற்காட்டி அப்பெயர் வழக்கத்தின் காரணத்தை எழுதாமற் போயினர். ஆனால் அவ்வேளிர்தலைவன் அவ்வாறு புலிகடிமாலென்று பெயர்பெற்ற காரணத்தைச் சங்கநூல்களினின்று தெரிதல் அரிதாம். ஆயினும், நிரம்பப் பிற்காலத்தே துவாரகையினின்றுவந்து மைசூர்நாடாண்ட வேளாளர்,அப்பெயர்க்காரணத்தைத் தம் சரித்திரத்தால் விளக்கித் தாம் அவ்வேளிருடன் ஒற்றுமைபெற்ற வகுப்பினரென்று குறிப்பிக்கின்றமை வியக்கத்தக்கது. "கொங்குதேசராஜாக்கள்சரித்திரம்" என்ற நூலினும், வேறு ஆங்கிலத்தில் வரையப்பட்ட சிலநூல்களிலும், துவாரசமுத்திரம்யாதவர் 'ஒய்சள' வமிசத்தினரென்றழைக்கப்படுதற்குப் பின்வருங் கதைகூறப்படுகின்றது:— "தபங்கர் என்னும் முனிவரொருவர் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது ஒரு புலி அவர்மேற் பாயவர அது கண்டு நடுங்கிய அம்முனிவர், அப்போது காட்டில் வேட்டையாடிவந்த 'சளன்' என்னும் யாதவ அரசனொருவனை நோக்கி 'இப்புலியைக் கொல்' என்றேவ, அவனும் அவ்வேங்கையைத் தன்னம்பால் எய்து வீழ்த்தினமையால் அவன் வமிசத்தார் 'ஒய்சளர்'* எனக்கன்னடத்தில் வழங்கப்பட்டார்" என்பதாம். இக்கதை அப்பேலாலரைப்போலவே துவாரகையினின்றும் வந்து, பழையகாலத்தே தமிழ்நாடாண்ட வேளிரைச்சார்ந்த இருங்கோவேள் என்பான் 'புலிகடிமால்' என்னும்பெயர்பெற்றதன் வரலாற்றையும் விளக்கவல்லதாம். புலியைக்கொன்று முனிவரைக்காத்த யாதவத்தலைவனொருவனைத் தங்கள் வழிக்கு ஆதிமுன்னோனாகக் கொண்டமையினன்றோ, அவ்விருவரும் 'ஹொய்சளர்' எனவும் 'புலிகடிமால்' எனவும் ஒத்தசரித்திரம் பெற்றனராவர். இவ்வாறு

---

* "ஹொய் சள" என்பது "கொல் சளனே" என்னும் பொருளிற் கன்னடத்தில் வழங்கப்படுவதென்பர்.

1800-வருஷத்துக்கு முற்பட்டவேளிரும், 900-வருஷங்கட்கு முந்திய பேலாலரும் சாதியாலும் குலத்தாலும பெயராலும் பெரிதும் ஒற்றுமைபெற்றுத் தம்மை யாதவக்கூட்டத்தவரென்றுகாட்டிக்கொள்வதைக் காணலாம்.

இனி, முற்காலத்து வேளிராகிய யாதவரும், பிற்காலத்துத் துவாரசமுத்திரயாதவரும் முறையே 'வேள்' எனவும் 'வேளாளர்' எனவும் பெயர்பெற்றதன் காரணத்தையும் சிறிதாராய்வோம். விந்தியமலையின் தெற்கேயுள்ள பிரதேசத்தை ஆண்டுவந்த பழைய அரசருள் சளுக்கியர் என்னுமொருபிரிவினருமுண்டென்பதைப் பலர் அறிவர். இவர்களுடைய புராதனநாடு கூர்ச்சரமும் அதன் தென்பக்கத்துப் பிரதேசமுமாம். பிற்காலத்தில், இவருள் ஒருகூட்டத்தார் கீழ்க்கடனாடுகளைக் கைப்படுத்தித் தென்னாட்டிற் சிலபகுதிகளையும் ஆண்டமையால், இவ்வேறுபாடறிதற்கு, இவர்களைக் கீழைச்சளுக்கியரெனவும் மேலைச் சளுக்கியரெனவும் இருபகுதியினராக வழங்கினர். இவருள் தமிழ்நாட்டையாண்ட சளுக்கியரைப் பண்டைத் தமிழ்நிகண்டுகளில் 'வேள்புலவரசர்' எனக் கூறப்பட்டுள்ளது. இதனை 'வேள்புல வரசர் சளுக்கு வேந்தர்' எனத் திவாகரத்திலும் பிங்கலந்தையிலும் வருதல் காண்க. இவற்றுள் திவாகரம் பாடுவித்த அம்பர்கிழான்சேந்தனார் கடைச்சங்ககாலத்தவரான ஔவையாராற் பாடப்பட்டவரென்பது, அந்நிகண்டானே விளங்குதலால், அத்திவாகரம் ஏறக்குறைய 1800-வருஷங்கட்கு முற்பட்டதென்பது தெளிவாம். கி-பி. 5-ஆம் நூற்றாண்டுக்கும் முந்திய சளுக்கியசாஸனங்கள் இப்போது காணப்படவில்லையாயினும், அச்சளுக்கர் பழமைபெற்ற குடியினரென்பதற்கு இரண்டாம்நூற்றாண்டினதாய திவாகரம் அவ்வரசர்பெயரை எடுத்தோதுதலே தக்கசான்றாம். இச்சளுக்கு வேந்தரை 'வேள்புலவரசர்' என அந்நிகண்டுடையார் கூறுவதில், 'வேள்புலம்' என்பது, அவர்கள் ஆண்டுவந்த கூர்ச்சரமுதலிய பிரதேசத்தையே குறிப்பதாகும். திவாகரம் செய்தார் காலத்தில், இப்போது மகாராஷ்டிரம் என்றழைக்கப்படும் வேள்புலத்தினின்றுவந்து தென்னாட்டிற் சிலபகுதியை ஆண்டமைபற்றிச் சளுக்கியர் 'வேள்புலவரசர்' என அழைக்கப்பெற்றனராவர். ஆகவே, முற்

*

காலத்தே தமிழ்நாட்டிற் குடியேறிய யாதவரும், பிற்காலத்தே வந்த துவாரசமுத்திரஹொய்சளயாதவரும் 'வேள்' எனவும் 'வேளாளர்' எனவும் பெயர்பெற்றதற்குக் காரணம், அவ்விருவரும் வேள்புலத்தினின்றும் வந்தமையேயாகுமென்பது தெளிவாயிற்று. இது நிற்க.

மேற்கூறியவாறு, சளுக்கரசர்க்கு "வேள்புலவரசர்" என நிகண்டுகளிற் பெயர் வழங்கப்பட்டதன்றி "வேள்" என்ற சொல்லே அவர்க்குரியதாகவும் சொல்லப்படுகின்றது. இதனைத் "தார காரியுஞ் சளுக்கியர் வேந்தனும், வேளி லாளனும் வேளென லாகும்" என்னும் பிங்கலந்தையாற் றெரியலாம். வேள்புலத்தினின்றும் வந்தமைபற்றிச் சளுக்கர் 'வேளிர்' என வழங்கப்பட்டாரென்பது ஒரு முடிபாயினும், தமிழ் நாட்டு வேளிராகிய யாதவரைப்போல அவ்வரசரும் யாதவக் கூட்டத்தவருள் ஒரு பிரிவினர் என்பதற்குச் சில சான்றுகள் உள்ளன. அவ்யாதவரைப்போலவே, சளுக்கருடைய புராதன நாடு கங்காதீரமாகவும், வமிசம் சந்திரகுலமாகவும், கொடி கங்கையமுனைவரைந்ததாகவு மிருத்தலோடு, விஷ்ணுபுராணங்களில் யாதவர்க்கு அதிகமாக வழங்கப்படும் "வல்லபர்"* என்னும் பெயர் சளுக்கர்க்குரிய அடைமொழியாகவும் சாஸனங்களிற் காணப்படுகின்றது. இதனைப் புலிகேசிவல்லபன், கிருதவர்மவல்லபன் என்னும் பெயர்களால் தெரியலாம். இவற்றால் யாதவருள் சளுக்கியரும் ஒரு பிரிவினரென்பது விளக்கமாம். இனி இச்சளுக்கிய யாதவர், தமிழ்வேளிருடன் ஒற்றுமைபெற்ற வகுப்பினர் என்பதற்குச் சிறந்தசான்றொன்று, "பம்பாய்கஜட்டியர்"என்னும் பத்திரத்தின் முதற்றொகுதி, இரண்டாம்பகுதி, 339-ஆம்பக்கத்தே காணப்பட்டது. அதனுள், "வடதேசத்தில், ஆரீத பஞ்சசிகர் என்னும் முனிவரொருவர், தமது யாககுண்டத்தில் அவிசிடும்போது, அவரது தீர்த்தபாத்திரத்தினின்றும் ஓரரசன் உண்டானனென்றும், 'சுளுகம்' என வடமொழிப்பெயர்பெற்ற அப்பாத்திரத்தினின்று பிறந்த

---

* "வல்லபர்" என்பதற்குச் "சுற்றிக்கொண்டிருப்பர்" என்பது பொருளாம். வல-சம்வரணம்; சுற்றுதல். யாதவர்க்கு இப்பெயர் வழங்கியதன் காரணம், அவர் தமது பசுக்கூட்டங்களோடும் பல நாடுகளினும் குடியேறி வந்தமையே என்று விளங்குகிறது.

மைப்பற்றி அவன் சுளுகனென அழைக்கப்பட்டானென்றும், பின்னர், அவன்வழியினர் 'சுளுகர்' எனப்பெயர்கொண்டார்களென்றும்" கூறப்பட்டுள்ளன இவரே சளுக்கர், சளுக்கியர், சாளுக்கியர்எனப்பிற்காலத்துத் திரித்து வழங்கப்பட்டனர்.

'வேளிர்' என்று பிங்கலந்தையில் வழங்கப்பட்ட சளுக்கியரது வரலாற்றை விளக்கும் இக்கதை, புறநானூற்றில் 'முற்காலத்தே வடதேசத்து முனிவரொருவரது பாத்திரத்திற் றோன்றியவர்' என்று கூறப்பட்ட வேளிர்வரலாற்றோடு ஒன்றியிருத்தல் ஈண்டுப் பெரிதும் அறிந்துமகிழத்தக்கது. இதனை "வடபால் முனிவன் தடவினுட் டோன்றி...யுவராவீகைத் துவரை யாண்டு, நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிர்" என முற்கூறிய கபிலர் பாட்டாற் கண்டுகொள்க. இப்பாட்டில்வரும் 'தடவு'என்பது ஈண்டுப்பாத்திரம் என்னும் பொருட்டு. இவ்வாறு, வடதேசத்து முனிவரொருவரது தீர்த்தபாத்திரத்திற்றோன்றிய வரலாறும், 'வேள்' என்னும்பெயர்வழக்கமும் வேளிர் என்பார்க்கும், சளுக்கியருக்குமுரியனவாக வழங்குதலால், அவ்விருவரும் ஒருகுலத்தினுதித்த யாதவவகுப்பினராதல் நன்குதேறப்படும். ஆயின், யாதவர், முனிவரொருவரது தீர்த்தபாத்திரத்தினின்றுமுதித்தவரென்பதற்குப், புராணேதிகாசங்களினின்று மேற்கோள்காட்டுதல் இப்போதுகூடவில்லை; இதுவரை கூறிவந்தவற்றால் "வேளிர்' என்ற பெருங்கூட்டத்தவர், கண்ணபிரான் வமிசத்தவராய்த் துவாரகையினின்று தமிழ்நாட்டிற் குடியேறியவர்' என்று எழுதிய நச்சினார்க்கினியர்செய்தி பிரபல ஆதாரங்களால் வற்புத்தி நாட்டப்பட்டமை கண்டுகொள்க.

இனிச் செந்தமிழ்நிலத்தைச் சூழ்ந்துள்ளனவாகச் சொல்லப்படும் பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களுள் "வேணாடு" என்பதொன்றாம். இஃது யாதவரது பழந்தேயமாகிய வேள்புலமென்று கருதப்படுகின்றது. வேள்புலமென்பது, இப்போது 'கொங்கணம்' என்றழைக்கப்படும்நாட்டுக்கு வடக்குள்ள பிரதேசமென முன்னர்க் குறிப்பிட்டோம். கொங்கணம் முற்காலத்தே தமிழ்வழங்கும் நாடாகவிருந்ததென்பது, புறநானூற்றிற் "கோண்கானங்கிழான்" என்

னும்வேளைப் பண்டைத் தமிழ்ப்புலவர் பாடியுள்ள பாடல்களால் இனிதுவிளங்கும். இனி இக்கொண்கானத்தை யடுத்திருந்த வேணாட்டினுந் தமிழர் தங்கித் திரிசொற்களாலாகிய தமிழை வழங்கினமையால், அத்தன்மைநோக்கி அது கொடுந்தமிழ் எனப்பட்டது. யாதவர்க்குரிய அவ்வேணாடுமுழுதும் தமிழ்நாடன்றாயினும், அதன் சிலபகுதியிற் றமிழுஞ்சென்று வழங்கினமைபற்றிச், செந்தமிழ்நாட்டார், அதனைக் கொடுந்தமிழ்நிலங்களுள் ஒன்றாகக்கொண்டு எண்ணினரென உணர்க. வேளிரது நாடென்னும் பொருளுடைய வேணாடு என்னுந் தொடர்சொல்லே வேண் — நாடு எனப்பிரித்துத் "தென் பாண்டி குட்டங் குடங் கற்கா வேண்" என்னுமிடத்து 'வேண்' என்பதே பதமாக வழங்கியது பிற்காலத்துத் திரிபென வுணர்க.

இனி, இவ்வேளிரின் ஆதிமுதல்வர் எக்காலத்தில் தென்னாடு வந்து குடியேறியவராவர் என்பதை ஆராய்வோம். கண்ணபிரானுக்குச் சிறிதுபிற்காலத்தே வெளியேறியவராக நச்சினார்க்கினியரது கர்ணபரம்பரைச்செய்தி காட்டுதலால், பொதுவாக, இவர்கள்பாரதகாலத்துக்குப்பின தென்னாட்டுக் குடிபேறினவரென அறியப்படினும்: சிறப்பாக, இன்னகாலத்தில் இவர்கள் வந்தவராதல்வேண்டுமென அறிதற்கு ஒருவழியும் உள்ளது. மேற்கூறியவாறு, இருங்கோவேள் என்பானைக் கபிலர் புகழுமிடத்து, "நீயே .....துவரையாண்டு நாற்பத்தோன்பது வழிமுறைவந்த, வேளிருள்வேளே" எனக் குறிப்பிட்டுள்ளனர். இஃது இப்புலவர்காலத்தில் வேளிர்வமிசத்தைப் பற்றிப் பிரபலமாகவழங்கிவந்த செய்தியைஅறிவித்ததன்றோ! இனி இந்நாற்பத்தொன்பது என்னும் எண்கொண்ட தலைமுறைகளின் ஆட்சிக்காலத்தைக் கணித்து, வேளிரின் ஆதிமுதல்வர் இன்ன காலத்தவராதல் வேண்டுமென ஒருவாறுமுடிவுபடுத்தல் அருமையன்று. பழங்காலத்தில் ஆரியாவர்த்தத்தையாண்ட பலிபுச்சகன்வழி யரசர்கள் முப்பத்துமூவர், 486-வருஷமும், மோரியவரசர் பதின்மர், 137 வருஷமும் ஆண்டதாக விஷ்ணுபுராணம் மத்ஸ்யபுராணம் முதலியவற்றிற் கூறப்படுகின்றது. இவற்றைநோக்கின் முதலிற்கூறிய பலிபுச்சகவழியரசர் தலைமுறையொன்றற்குச் 'சராசரி' 15-வருஷமும் அடுத்த மோரியவழியரசர் 14-வருஷமும் ஆட்சிபுரிந்தவராக ஒரு

கணக்கு ஏற்படும். இவ்வாறே பழைமைப்பட்ட அந்நிய அரசு முறையை ஆராயினும், நிகழ்காலத்தில் எல்லாத் தேசங்களுடைய கவனத்தையுங் கவர்ந்துவருகின்ற ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை இப்போது ஆட்சிபுரியும் "முற்சு ஹிடோ" சக்கரவர்த்தி, தமது பழைமைபெற்றதும் இடையூறுபடாததுமாகிய ஏகாதிபத்திய அரசரில் 123-வது தலைமுறையினராகச் சொல்லப்படுகின்றார். அவ்வேகாதிபத்தியத்தை நாட்டிய ஆதிசக்கரவர்த்தியாகிய 'ஜிம்மு-தின்னோ' இற்றைக்கு 2500-ஆண்டுகட்கு முன்விளங்கியவர் என்பது ஜப்பான் சரித்திரத்தால் தெரியவருகின்றது. இனி, இவ் 2500-வருஷங்களையும், அவ்-123 அரசர்க்கும் பகிர்ந்தால், ஜப்பான சக்கரவர்த்திகள் ஒவ்வொருவர்க்கும், 21-ஆண்டுக்கணக்கு ஏற்படும். இம்முறையே, ஆயுள்விர்த்திபெற்றகுளிர்தேசமாகிய ஐரோப்பியநாடுகளில் இங்கிலாந்தரசர்க்கு 23-ம, பிரான்ஸ்அரசர்க்கு 24-ம், ஜர்மானியஅரசர்க்கு 23-ம், இரஷியவரசர்க்கு 19-ம் தலைமுறையாட்சிக் காலமாக வரையறுக்கப்பட்டுள்ளன.* இவற்றுள்ளே, அதிகநிறைவும் அதிகக் குறைவுமில்லாது நம்மோடொற்றுமைப்பட்ட கண்டத்தினராய ஜப்பானியத் தலைமுறைக்கு விழுந்த 21-ஆண்டளவை, நாம், மேற்கூறிய நாற்பத்தொன்பது வேளிர்க்குங்கொண்டு கணிப்போமாயின் கபிலர் பாடிய இருங்கோவேளுக்கு 1029-வருஷங்கட்கு முற்பட்டதே, அவன்வழியின் ஆதிமுன்னோரது காலமென்பது பெறப்படும். படவே, கடைச்சங்கத்தவராகிய கபிலர்பாடிய அவ்விருங்கோவேள் காலம், ஏறக்குறைய 1800-வருஷங்கட்கு முற்பட்டதென்பது தெளிவாதலால், வேளிருடைய ஆதிமுன்னோர் தமிழ்நாட்டுக்கு வந்தேறிய காலம் கி. மு. 11-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாம் என்பது வெளியாகும். இக்காலவரையறை பிரசித்தர்களாகிய ஸ்ரீ ரோமேச சந்திரதத்தர், ஸ்ரீ வேலந்தை-கோபாலையர் முதலியோர், பலபிரபல பிரமாணங்களால், கி. மு. 13†,12-ஆம்‡ நூற்றாண்டினதென் றுமுடிவுபடுத்துநாட்டிய பாரதகாலத்துக்குச் சிறிதுபிற்பட்டு நெருங்கி

* The Chronology of Ancient India. pp. 65.
† Dutt's Ancient India. pp. 10.
‡ Chronology of Ancient India. The Date of the Mahabharata War.

யுள்ளது. இவ்வாறு நெருங்குதல் கண்ணபிரானது வியோகத்தின் பின் வந்தவர் அவ்வேள்புலத்தலைவர் என்னும் வரலாற்றோடு ஒத்துள்ளமை கவனித்தற்குரியது. இக்காலவரையறையினும், சிறப்பாக அளந்தறிதற்குத் தக்க கருவி வேறுகாணப்படவில்லை.

இனி, மேற்கூறிய வேள்புலமாக்களும், அவரது தலைவரும் முற்காலத்தில் தென்னாட்டிற் குடியேறி வாழ்ந்து விளங்கிய சரித்திரத்தைச் சுருக்கமாக எடுத்துக்கூறுவோம். எண்ணிறந்த யாதவர்கள், தாம்ஆதியில்வசித்த கங்கைக்கரைநீங்கிக்குடியேறிய வேள்புலத்தைவிட்டு, அதற்குந் தெற்கேயிருந்த பெருங்காடுகளைத்திருத்தி ஆண்டுங் குடியேறத்தொடங்கினர். அவர்கள் நாகரிகமுடைய வகுப்பினராதலின், அரசுத்தொழில் படைத்தொழில் முதலியவற்றினும் தாமுயன்ற குடியேற்றத்திற்கு இன்றியமையாதிருந்த உழுதொழில், கொற்றொழில், மண்சுடுதற்றொழில், நெய்தற்றொழில் முதலிய பலவகை விருத்திகளினுங் கைதேர்ந்திருந்தனர். இவர்கள் தமிழ் நாட்டிற் புகுமுன், ஆங்கு, அக்காலத்திற் பல்கிப்பெருகிப்பருத்த நாகர் என்ற சாதியாரும், ஆரியாவர்த்தத்தின் வடகீழ்த்திசையினின்று இறங்கிய வேறு சில கூட்டத்தாரும் குடியேறித் தம் தலைவரின்கீழ் அமர்ந்திருந்தனர். பாரதகாலத்தில் மேற்கூறிய ஜாதியார் தமிழ் நாட்டிற் றங்கியிருந்தவரலாறு பழையநூல்களாற் றெரியவருகின்றது. சேரர் வடகீழ்த்திசையினின்றும் வந்தேறியவர். இவ்வரலாற்றை ஸ்ரீமத். கனகசபைப்பிள்ளையவர்கள், தமது நூலிற்படிப்போர் மகிழ்ந்துவக்குமாறு எழுதியிருத்தலால், நாம் அவற்றைக் கூறுதல் மிகையாம். இனித் தமிழ்நாட்டுப் பழங்குடிகளாயிருந்த சாதியாரை, மேற்கூறிய நாகர்முதலிய வந்தேறிகள் அடக்கித் தாம் அவர்கள் நாட்டை ஆண்டுவந்தனர். இவ்வாறுஇவர்கள் தமிழ்நாட்டையடிப்படுத்து ஆண்டகாலத்திற்றான், யாதவர்கள் அந்நாட்டுக்கு வடக்கே மனிதசஞ்சாரமின்றிப் பெருங்காடாய்க்கிடந்த பிரதேசங்களைத் திருத்திக் குடியேறிக்கொண்டே, தென்னாடு புகுந்தது. அவ்வாறு அவர்கள் காடுகளைத் திருத்திவரும்போது, அங்ஙனம் திருத்திச் செழிப்பாக்கப்பட்ட நாடுகளை அவர்கள் தமக்குரியதானமாக்கித் தந்தலைவரின் கீழமர்ந்தனர். வேறுசிலர், அங்ஙனமன்றி, தாம் கொணர்ந்த

ஆடுமாடுகளுடன் காட்டிற் சரித்துவந்தனர். நாடுகளிற் றங்கியவர், பதிக்குடையோர் என்னும் பொருள்கொண்ட 'கிழார்' எனவும் தம் ஆதிநாட்டினடியாக 'வேளாளர்' எனவும் பெயர்பெற்றனர். இவர்கள் தாந்திருத்திவந்த நாடுகளிற் கூடிவாழ்ந்து, சமக்கின்றியமையாத பலவிதத்தொழில்களிலுந் தேர்ந்து நாகரிக முதிர்ச்சிபெற்றனர். ஆரியவகுப்பினருள் க்ஷத்திரியஜாதியைச்சேர்ந்த இவர்கள் தந்நாடு செழித்தல் கருதி வணங்கிய தெய்வம், ஆதியாரியர் மழைக்குரிய தேவதையாக வணங்கிவந்த இந்திரனேயாவன். இவர்கள் பண்டுதொட்டே இந்திரனை வணங்குதல் மரபென்பது, கோவர்த்தனத்தில் யாதவர் இந்திரவிழவெடுத்ததாகக் கேட்கப்படும் புராணகதைகளே சான்றும். இவர்கள் ஆதியில் கங்கைக்கரைநாடுகளில் வசித்தவர்களாதலின், இவர்கள் தங்களை கங்காபுத்திரர், அல்லது கங்கை வழிபினர் என்று கூறிவந்தனர். இவர்களையாண்ட சிற்றரசர் 'வேளிர்' 'வேண்மார்' என அழைக்கப்பட்டனர்.

இனித், தங்கள் பசுக்கூட்டங்களோடு காட்டிற் றிரிந்து வந்த மற்றொரு கூட்டத்தாராகிய யாதவர், அக்காரணங்கள் பற்றி ஆயர் கோவலர் எனவும், முல்லைநிலமாக்கள் எனவும் பெயர் பெற்றார்கள். இவர்களும், அவ்வேள்புலத்தினின்றே வந்தேறிகளாயினும், நாடுகளிற் கூடிவாழ்ந்தவரன்மையால், முன்னவர் போன்ற தொழிற்றேர்ச்சியும் நாகரீகமும் உடையவரல்லர். இவ் யாதவர், திருமாலவதாரமாகத் தங்குலத்திலவதரித்த கண்ணனையும் பலதேவரையும் தமது குலதெய்வங்களாகக்கொண்டு, அவர்கட்கு விழா, கூத்து முதலியனவெடுத்துப் போற்றி வந்தனர். பாண்டியர் ஆதியிற் றென்னாடு புகுந்து அரசுமுறை தாபித்த காலத்தில், இவ்வாயரும் வந்தவர்களென்ற செய்தி கலித்தொகையிற் கூறப்படுகின்றது. இதனை "வாடாச்சீர்த் தென்னவன், றொல்லிசை நட்ட குடியோடு தோன்றிய நல்லினத்தாயர்" எனவும், "வீவில் குடிப்பினிருங் குடியாயர்" எனவும் வருவனவற்றால் உணர்க. கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கிய நந்தசக்கரவர்த்தி காலத்தவரும், பாணினிக்கு "வார்த்திகை" எழுதினவருமாகிய காத்தியாயனர், பாண்டிய சோழர்களை எடுத்தோதுவதோடு, "பாண்டுவமிசத்தவன் ஒருவனிடமிருந்து

தோன்றியவர் யாவர், அவர் பாண்டியர்"* எனச் சொன்முடிபுகாட்டிப், பாண்டியர் வரலாற்றைக் குறிப்பிக்கின்றார் என்பர். இப்பாண்டியர் பாண்டுவின் வழியினராய்த் தென்னாடாண்டவராதல் வேண்டுமென்பதற்கு, அவர் வமிசம் சந்திரகுலமெனப் படுதலையும், வடநாட்டுச் சந்திரகுலத்தினரின் தலைநகருள் ஒன்றாகிய மதுரை போல, இவர் தலைநகரும் மதுரையென வழங்கப்படுதலையும், பாண்டுவின் புத்திரர்களுடைய வழியினரென்பது தோன்றப் 'பஞ்சவ' னெனப் பாண்டியவரசர் பெயர்பெறுதலையும் சிறந்தபிரமாணங்களாகவும் எடுத்துக்காட்டுவர்.† சோழரும், இவ்வாறே, சூரியகுலத்தவனாகிய முசுகுந்த சக்கரவர்த்தியை ஆதிமுதல்வனாகவுடையவரெனத் தமிழ் நூல்கள் கூறும். இம்முசுகுந்தன் கண்ணபிரானால் அநுக்கிரகிக்கப்பட்டவ னென்று புராணங்களிற் சொல்லப்படுகின்றது. இது கிடக்க. காட்டில் வசித்த அவ்ஆயராகிய யாதவர் தமக்குட் சிற்றரசுகள் உடையராயிருந்தன ரெனவும், அவற்றைப் பிற்காலத்திற் ‡சேரருஞ் $சோழரும் அழித்தனரெனவும் தெரிகின்றது.

இவ்வாறு, தமிழகத்துப்புகுந்து நாட்டிலுங்காட்டிலும் தங்கிய யாதவக்கிளைகள், ஆதியில் க்ஷத்திரிய வகுப்பினராயினும், பன்னெடுங் காலமாகக் குடியேற்ற முயற்சியிற் சென்றமையாலும், உடனொத்த ஆரியக்கூட்டரவின்றித் தமிழகத்திற் றத்தந் தொழில் வேறுபாட்டாற் பிரிந்தமையாலும் தமது புராதன ஆசாரணையைச் சிறுகச்சிறுக நெகிழவிட்டனர். ஆயினும் இவருடன்பிறந்த வீரத்தன்மையும், உறுதிப்பாடும் எக்காலமும் இவர்களைக் கைவிட்டில.

இங்ஙனம் தமது பெருத்த குடியேற்றத்தில், உழுதொழில், கொற்றொழில், மண்சுடுதற்றொழில் முதலிய செய்துவந்த வேளிர் வகுப்பார், தாம் வழிவழியாகப்பற்றிய அத்தொழில்களின் வேறுபாட்டால் தாமும் வெவ்வேறு கிளைகளாக எண்ணப்பட்டு மறைந்தனர். இவர்களுக்குள் எல்லாம் பெரிதும் பல்கிப் பெருகிய யாதவர் உழுதுண்டுவாழ்ந்த வேளிரேயாவர். ஆசிரியர் நச்சினார்க்

---

* Varthika on Ponini. IV 1—168.
† The Tamils 1800-years ago.
‡ பதிற்றுப்பத்து, எக, அஅ.
$ பட்டினப்பாலை. உஅக.

DR U. V. S. ... LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.


கினியர் தொல்காப்பியவுரையில் இவ்வேளிரைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றனர்.— "வேளாளர் இருவகையர்: உழுவித்
"துண்போரும், உழுதுண்போருமென. அவருள் உழுவித்துண்
"போர் மண்டிலமாக்களுந் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப்
"பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும்,
"பெருஞ்சிக்கலும், வல்லமுங், கிழாரும் முதலியபதியிற்றோன்றி
"'வேள்' எனவும் 'அரசு' எனவும் உரிமையெய்தினோரும் பாண்
"டியநாட்டுக் காவிதிப்பட்டமெய்தினோரும் குறுமுடிகுடிப் பிறந்
"தோர் முதலியோருமாய் முடியுடைவேந்தர்க்கு மகட் கொடைக்
"குரிய வேளாளராம்" (தொல். அகத். ௩0) எனவும், "வேளாளர்
"பகைவர் மேலும், நாடுகாத்தன்மேலும், சந்துசெய்வித்தன் மே
"லுஞ் செல்லுதற்குரியர்" எனவுங்கண்டுகொள்க. இன்னும், அவர்
"அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுந் தொல்காப்பியச்
சூத்திரவுரையில், 'இருமூன்று மரபினோர் பக்கமும்'என்பதற்கு,
"ஓதலும் ஈதலும் உழவும் நிரையோம்பலும் வாணிகமும் வழிபாடுமாகிய அறுவகையிலக்கணத்தையுடைய வேளாளர் பக்கமும்"
எனவுரைகூறி, வேளாளர்க்கு அறுதொழில்கூறுவர். இவ்வறுதொழில்களுள் நிரையோம்பலும், வாணிகமுங் கலந்திருத்தல் கண்டுகொள்க. இவற்றால் வேளாளருட்பலரைத்தமிழ்ப்பெருவேந்தர்கள் தம்மிராசாங்கத்து உயர்நிலையில் வைத்து மதித்துவந்தமை அறியப்படுதலோடு, அவரினத்திற் சிற்றரசர்களாக விளங்கிய வேளிருடைய பெண்களை அப்பேரரசர் மணம்புரிந்து வந்தாரென்றும் தெரியவருகின்றது. இவ்வாறு அவர் மணம் புரிந்து வந்தசெய்தி பதிற்றுப்பத்து முதலிய பழைய நூல்களினும் பலவாகக் கேட்கப்படும். இவ்வேளிர் பழைய ஆரியவகுப்பினராய் அக்காலத்து நாகரிக முதிர்ச்சி பெரிதுங் கொண்டிருந்தமைபற்றி, உயர்குலத்தினராய அவ்வேந்தர் தம்மோடொத்தவராகக்கருதி அவ்வேளிருடன் சம்பந்தம் செய்து வந்தாரெனவுணர்க. தொல்காப்பியனாரும் 'கிகர்த்துமேல்வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்' (புறத்-எசு.) என்புழி, இம்மணநிகழ்ச்சியே கூறினர்.

*

வேளிர்கள், ஆதியிற் றமிழகத்துச் சிற்றரசுகளைத் தாபித்து வந்தகாலங்களில், இவர்க்கும், சேரசோழபாண்டியர்க்கும் அடுத்தடுத்துப் போர்நிகழ்ந்துவந்ததாக அறியப்படுகின்றது. வேளிரது பழைமைப்பட்டுவரும் நாடுகள் கொண்கானம், முத்தூற்றுக்கூற்றம், பொதிகைநாடு, மிழலைக்கூற்றம் * முதலியனவாம். பிற்காலத்தில் அவ்வேளிர்பால் மகட்கொண்டு சம்பந்தம்பெற்ற பேரரசர்கள், அவரது சிற்றரசுகளை ஆதரித்து வந்ததோடு, அவரினத்தராய் நாகரிக முதிர்ச்சி பெற்ற வேளாளர் பலரைத் தம்மரசுமுறைக்கின்றியமையாதவராக மதித்து, அவர்கட்கு நாடுபலவற்றை அளித்தும், வரிசைகள் கொடுத்தும் அமைச்சர்களாகவும், தண்டத்தலைவர்களாகவும் வைத்துப் போற்றிவந்தனர். சிற்றரசருள் ஒருவனாகிய அழும்பில்வேள், சேரன் செங்குட்டுவனது அமைச்சருட் சிறந்தவனென்பது சிலப்பதிகாரத்தாற் றெரிகின்றது. பாண்டியரிடம் அமைச்சுத்தொழில் பூண்ட வேளாளர் "காவிதி" என்னும் பட்டத்துடனும், சோழரிடம் "ஏனாதி" என்னும் பட்டத்துடனும் விளங்கினர். "சோழிய வேனாதி தன் முகநோக்கி" என மணிமேகலையில் வருதல் காண்க. கரிகாற்சோழன் மற்றெல்லாரினும் சிறப்பாக, இவர்கட்கு 74-நாடுகளுடைய 24-கோட்டங்களையுதவிப் பெரிதும் ஆதரித்த செய்தி சாசனங்களால் விளங்குகின்றது. ஆரியமொழியில் சூத்திர ரூபமான நூல்களெழுந்த காலமென்று சரித்திரவறிஞர் கண்டு வெளியிட்டுள்ள ஒரு கால விசேடத்தின் கடைப்பகுதியில் (ஸ்ரீ. கனகசபைப்பிள்ளையவர்கள் கி. மு. 2-ஆம் நூற்றாண்டென்பர்) செய்யப்பட்ட தொல்காப்பியத்தில், இவ்வேளாளரில் உழுதுண்போர் பலர் கொண்ட தொழிலாதல் பற்றி "வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது, இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" எனக் கூறப்பட்டதாயினும், இவருட் பலர் சிற்றரசராய்ச் சிறந்து விளங்கினமையாலும், தமிழ் மூவேந்தர் சார்பிற் பெரிதும் மதிக்கப்பட்டு வந்தமையாலும்

"வேந்துவினை யியற்கை வேந்தனி னொரீஇய
வேனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே"

---

* இது பாண்டிநாட்டின்கண்ணது. இதன் பிரிவொன்று 'துவராபதி நாடு' என இன்றும் வழங்குதல் ஈண்டுக் கவனித்தற்குரியது.

"வில்லும் வேலுங் கழலும் கண்ணியும்
தாரு மாலையுந் தேரும் வாளும்
மன்பெறு மரபினே னோர்க்கு முரிய" எனவும்,

"வேந்துவிடு தொழிலிற் கழலுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே"

எனவும், வேளிர்க்கு அரசர்க்குரிய வரிசைபலவும், வேளாளர்க்குக் கழலுங் கண்ணியுங்கூறப்படுதல் காண்க. தொல்காப்பியர், தங்காலத்தில் இவ்வேளிர்களுடைய ஒழுக்கம், வைசியர்க்குரியதுமன்றி, க்ஷத்திரியர்க்குரியதுமன்றி, அவ்விரண்டற்கும் பொதுநிலையிலமைந்திருந்தமையால், அவர்க்கு அவ்விரண்டையுங் கலந்தோதிப்போவர். உரையாசிரியரோ, வேளாளரதுயர்வு புலப்படுமிடனெல்லாம் அவர்க்கு உயர்குலப் பெருமையும், தாழ்வுபுலப்படுமாயின் அதனை அவருளிழிந்த உழுதுண்ணும் வேளாளர் மேலேற்றியும் கூறிப்போகின்றனர். இவை அக்காலத்திருந்த அவர்கள் நிலையாம். இனி, தமிழ்நாட்டிற் பண்டைக்காலத்தில்விளங்கிய சிற்றரசருட்பெரும்பாலார் இவ்வேளிர்வகுப்பினரே. இதுபற்றிப் பிற்காலத்தில் இவ் 'வேளிர்' என்னும்பதம், இடையிற்கிளம்பிய வேறுதலைவரையுஞ் சேர்த்து, குறுநிலமன்னரனைவர்க்குமுரிய பெயராக நிகண்டுகளிற் படிக்கப்பட்டது. ஆனல் இவ்வாறு பண்டைநூன்மேற்கோள் காணாமையின், அது பிற்காலத்திரிபு என்பது தெள்ளிது. அவ்வேளிர் இனத்தாராகிய வேளாளர், உழுதூண்டொழிலை ஏனையகுடிகளினும் சிறப்பாகவும் வழிவழியாகவும் கொண்டமையால், அச்சிறப்புப்பற்றி, அவர் பெயரடியாகப் பிறந்த "வேளாண்மை" என்பது உழுதூண்டொழிற்குரிய பெயராக வழங்குவதாயிற்று. அன்றியும், வழிவழியாகவந்த வேளிரது வள்ளன்மையையும், உறுதிதவருமையும், சிற்றரசுரிமையையும் நோக்கி, 'வேள்' என்பது உபகாரியென்னும் பொருட்கும் மெய்மைக்கும் இளவரசென்னும்பொருட்கும் உரியசொல்லாகவும்வழங்கத்தலைப்பட்டது. பண்டைக்காலத்துப்பதமாகிய 'வேளிர்' என்பது, புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்துள்ள தேர்க்காட்டூரில் வேளாளவகுப்பார் பலர்க்கு உரியபெயராக இன்றும் வழங்குதல் அறியத்தக்கதாம்.

இதுகாறும் கூறிவந்தவற்றால், தமிழ் நாட்டிற் பண்டைக்கால முதலே வருகின்ற 'வேளிர்' என்ற வகுப்பினர், கண்ணன் வழியிராய்த் துவாரகையினின்று வந்தேறியவரென வழங்கும் செய்தி, அவர் யாதவகுலத்தினர் என்பதை விளக்குகின்றதென்பதும், இக்கொள்கைக்குப் பொருந்த வேளிர் துவாரகையினின்று வந்தவரெனப் புறநானூற்று மேற்கோள் உண்டென்பதும், பாரதகாலத்தையடுத்து யாதவர் தெற்கே வந்தேறியதைக் குறிப்பாக விளக்கும் செய்திகள் முன்னூல்களினின்று அறியப்படுதலோடு, அவர் அக்காலத்தே தென்னாட்டிற்கு வந்து அரசியனாட்டினரென்னும் கர்ணபரம்பரை வடநாட்டிலும் வழங்குவதொன்றென்பதும், வேளிர் யாதவக் கூட்டத்தவரேயென்பது, பிற்காலத்தில் துவாரகையினின்று வந்து தென்னாடாண்ட 'ஹொய்சளர்' இவருடன் பல்லாற்றானும் ஒத்திருத்தலால் விளங்குவதென்பதும், வேள்புலத்தினின்று வந்தமையே அவ்விருவரும் வேளிர் எனவும் பேலாலரெனவும் பெயர்பெற்றதற்குக் காரணமென்பதும், இவ்வேளிர் என்னும் பெயர்வழக்கம் சளுக்காசர்க்கும் படிக்கப்படுகின்றதென்பதும், இச்சளுக்கரும் யாதவவகுப்பினரேயென்பதும், முனிவரொருவரது தீர்த்தபாத்திரத்திற்றோன்றிய வரலாறு சளுக்கர்க்கும் பண்டைவேளிர்க்கும் உரியதாகஅமைதலால், அவ்விருவரும் ஒருகுலத்துதித்தவரென்பதும், கொடுந்தமிழ் நாடுகளிலொன்றாகிய "வேணாடு" என்பது இவ்யாதவரது புராதன நாட்டையே குறிப்பதாமென்பதும், பண்டைவேளிர் தமிழ் நாட்டுக்குவந்தேறிய காலம் பாரதகாலத்தையடுத்த கி. மு. 11-ம் நூற்றாண்டாகக் கொள்ளுதல் பொருந்துமென்பதும், வேளிர் பெருங்கூட்டம் தென்னாடடைந்து குடியேறி வாழ்ந்தவரலாறு இதுவென்பதும் விளங்கியவாறு கண்டுகொள்க.

இவ்வாறு, வேள்புலத்தினின்று தமிழ்நாடுவந்து ஆட்சிபுரிந்த "வேளிரும்" அவரினத்தராகிய வேளாளரும், தமது வரையாது வழங்கும் வள்ளன்மையாலும், அரசாற் பெற்ற வரிசைகளாலும், எளியரைத் தாங்கிய அளியினாலும், நலிதற்காகா வலிமையாலும், பண்டுதொட்டே இத்தமிழ்நாட்டிற் பெரும்புகழ்பூண்டு விளங்கினர். முற்காலத்தினும், பிற்காலத்தினும் விளங்கிய தமிழ்ப்பெருங் கவி

களில் இவர்களைப் பாடிப் பயன்பெறாதவர் எவருமிரார். இவரது இரவாமலீயும் வள்ளன்மையை, இத்தமிழகத்திற் போற்றிப் புகழாத இடமுமில்லை. இத்தகைப் பெருமைபடைத்தவரின் வழியினராய் விளங்கியவர்களைப் பிற்காலக்கவிகள் வேண்டியவளவு வாயாரப் புகழ்ந்து பாடியுள்ளார். அவர்களுடைய முன்னோராய் ஏறக்குறைய 1800-வருஷங்கட்கு முற்பட்டுவிளங்கிய பெருவள்ளல்கள்;— வேள் ஆவி, வேள் ஆய், வேள் எவ்வி, வேள் பாரி, வேள்பேகன், முதலிய பலராவர். இவர்களது அழகிய சரித்திரங்களையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகுமாதலின், அவை பின்னர் ஆராய்ச்சிசெய்யப் பெறும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

---

உ

# பன்னிருமாசப்பெயர்கள்.

---

தமிழில்வழங்கும் தை மாசி பங்குனி சித்திரை வைகாசி ஆனி ஆடி ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி என்னும் மாசப்பெயர்கள் பன்னிரண்டும் வடசொற்களோ தமிழ்ச்சொற்களோவென வாராயுமிடத்து, அவை வடசொற்களாகவே தோன்றுகின்றன. தை யென்பது தைஷ்ய என்பதன் திரிபு. திஷ்யசம்பந்தம் தைஷ்ய என்பது. திஷ்யஎன்பது பூசம். பூசமாசமென்பது தை. மாசி என்பது மாகி என்பதன் திரிபு. மகசம்பந்தமுடையது மாகி பங்குனி என்பது பல்குனி என்பதன் விகாரம். சித்திரை என்பது சித்திரா என்பதன் திரிபு. வைகாசி என்பது வைசாகி என்பதன் திரிபு. ஆனி என்பது ஆக்நீய என்பதன் சிதைவு. ஆடி என்பது ஆஷாடமென்பதன் சிதைவு. ஆவணி என்பது சிராவணம் என்பதன் சிதைவு. புரட்டாசி என்பது பூர்வபாத்திரபதம் என்பதன் சிதைவு. ஐப்பசி என்பது ஆஸ்வீஜ என்பதன் சிதைவு. கார்த்திகை என்பது கிருத்திகா என்பதன் திரிபு. மார்கழி என்பது மார்

க்கசிர்ஷம் என்பதன் சிதைவு. எனவே பன்னிருமாசப்பெயர்களும் வடசொற்களேயாம்.

இம்மாசப்பெயர்கள் தமிழில் வந்து வழங்குமுன்னே அவை தமிழிலே எப்பெயரால் வழங்கப்பட்டனவென வாராய்வாம். மாச மென்னும் பொதுப்பெயர் தமிழிலே திங்களென்னுஞ் சொல்லால் வழங்கிவருதலின் மாசச்சிறப்புப் பெயர்களுந் தமிழிலுள்ளனவாதல் வேண்டும். எங்தெந்த நக்ஷத்திரத்திற்குப்பூரணைவருமோ அந்தந்த நக்ஷத்திரப்பெயரையே மாசங்கள் தமக்குச் சிறப்புப்பெயராகக்கொண்டன. மாசம் என்பதன்பொருள் அளவு. அது காலஅளவுக்கு ஆகுபெயர். அதுவும் சௌரமாசம் சாந்திரமாசம் சாவனமாசம் நாக்ஷத்திரமாசம் பார்ஹஸ்பத்தியமாசம் என ஐவகைப்படும். அவற்றுள் சந்திரனைக் கருவியாகக் கொண்டளக்கப்படுவதாகிய சாந்திர மாசமே இங்கே பேசப்படுவதாம்.

பூசநக்ஷத்திரத்திற்பூரணைவரும் மாசத்தைப் பூசமாசமென்பது வடமொழி வழக்கு. அம்மாசத்தைப் பூர்வத்திலே தமிழில் எவ்வாறு வழங்கினரென்பதே இங்காராய்ச்சி. பூசத்தின்பெயர் நான்கு. அவை குருவிஞள், கொடிறு, வண்டு, காற்குளம் என்பன. குருவிஞள் என்பது வடமொழிக் கலப்பாயிருத்தலின் அதனையொழித்து எஞ்சியமூன்றுந் தமிழ்ச்சொற்களாம். அவற்றுள் ஒன்றினலேயே அம்மாசத்தைப் பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் வழங்கினராகற்பாலர். அஃதாவது கொடிற்றுத்திங்கள் வண்டுத்திங்களென வழங்கினராகற்பாலர்.

அமரத்திலே பூசத்தின்பெயர்களாக வருவன சித்தியதிஷ்யநாமங்களிரண்டேயாம். சம்ஸ்கிருத அகராதிகளிலே குருவென்னும் பெயரும் அதற்குரியதாகச் சொல்லப்படுகின்றது. சித்தியம் சித்தியைத்தருவதெனவும் திஷ்யம் மகிழ்ச்சியைத் தருவதெனவும் பொருள்தருதலால் கொடிறு வண்டு காற்குளம் என்னும்பெயர்கள் அவற்றின் மொழிப்பெயர்ப்பாகாவாம். கொடிறு முதலிய மூன்றும் அந்நக்ஷத்திரம் தமக்குத்தோன்றிய வடிவம்பற்றித் தமிழ்நிலத்து நன்மக்களாலிடப்பட்ட பெயராகற்பாலன. கொடிறு என்பது கது

ப்புப்பல். அதுபோலும் வடிவினையுடைமையால் பூசம் கொடிறெனப்பட்டது. அது வண்டுபோலுதலின் வண்டெனவும் கால்வாயுடைய குளம்போலுதலின் காற்குளமெனவும்பட்டது. வராருசியார் வடமொழியிற் கூறியதைப் 'பூசம் புடோலம்பூவதுபோலும்' எனப்பிற்காலத்தார் மொழிபெயர்த்துக் கூறுதலைநோக்குமிடத்துக் கொடிற்றுப்பல் வண்டு காற்குளம் புடோலம்பூ என்பன சற்றேறக்குறையத் தம்முள் ஒத்தவடிவினவென்பது நன்கு துணியப்படும். வடநாட்டிலிருந்துநோக்கிய வராருசியார்க்குப் பூசம் புடோலம்பூப்போலவும் தென்னாட்டிலிருந்து நோக்கிய தமிழ்மாந்தர்க்குக் கொடிறுபோலவும் வண்டுபோலவும் காற்குளம்போலவும் தோன்றிற்றுதலின் தாந்தாங்கொண்ட குறிப்பையே அதற்குக் குறியாக்கினார்கள். அதுபற்றியே இருவர் குறிவழக்கும் வேறாயின.

மகத்தோடுகூடிய பூரணைமாசம் மாசியெனப்பட்டது. மகத்தின் பெயர்கள் கொடுநுகம், வேள்வி, வாய்க்கால், வேட்டுவன், மாசி, முதல்வருஞ் சனி என்பன. அவற்றுள் கொடுநுகம், வாய்க்கால், வேட்டுவன் என்பன அதன் வடிவுபற்றியிட்ட தமிழ்ப் பெயர்கள். வேள்வி என்பது மகம் என்பதன் மொழிபெயர்ப்பு. மாசி என்பது மாகி என்பதன் திரிவு. முதல்வருஞ்சனி என்பது வடமொழி கலந்தபெயர். முடநுகம் வாய்க்கால் வேட்டுவன் என்னும்பொருள்படவரும் வடமொழிப்பெயர் அமரமுதலிய நூல்களிற் காண்கிலம். ஆதலின் அவை தமிழ்நிலத்துவழக்கெனவே துணியற்பாலன. அவற்றுள் ஒன்றிறுலேயே அம்மாசம் பூர்வத்தில் வழங்கியதாகற்பாலது. வராருசியார் மகம் ஆந்தோளிகாரூபமுடையதென்பர். அஃதாவது தண்டிகைபோன்றதென்பர். தமிழ்நூலோர் மகத்தைக் கொடுநுகம்போன்றதென்பர். இருவர் நிலமும் வேறாதலின் தத்தம் நிலத்துள்ள ஒப்புடைப்பொருள்காட்டி அதற்கு வடிவுகூறினாராதலின் இருவழக்கும் ஒன்றற்கொன்று சம்பந்தமில்லா வழக்காம். ஆதலின், கொடுநுகமென்பது தமிழ்நிலத்திற் பிறந்தபொருளுஞ் சொல்லுமாம். வாய்க்கால் என்பது வளைவுபற்றி வந்த உவமப்பெயர். வேட்டுவன் என்பது வில்வடிவுபற்றிவந்த உவமப்பெயர்.

உத்தரத்தோடு கூடிய பூரணைமாசம் பங்குனியெனப்பட்டது. பல்குனமென்பது உத்தரத்தின் பெயராதலின் அதுசம்பந்த மாசம்

பங்குனியெனப்பட்டது. வசந்தகாலத்தையுடையதென்பது அதன் பொருள். பல்குனம் - வசந்தகாலம். தமிழ்நிகண்டிலே வரும் உத்தரத்தின் பெயர்கள், பங்குனி கடையெழுஞ்சனி செங்கதிர்நாள் என்னு மூன்றுமாம். அவற்றுட் பங்குனி வடசொல். கடையெழுஞ்சனி வடசொற்கலந்த பெயர்: செங்கதிர்நாளொன்றுமே தமிழ்ச் சொல். சூரியன் பிறந்த நாளாதலிற் செங்கதிர்நாளென்ப. ஆதலின், பூர்வத்திற் பங்குனி செங்கதிர்த்திங்களென்னும் பெயரினாலே வழங்கியதாகற்பாலது.

சித்திரையின் பெயர்கள் நெய், பயறு, மீன், அறுவை, ஆடை, தூசு, நடுநாள், தச்சன், துவட்டாநாள் என்பன. நெய் என்பது நெய்த்துளி; அதுபோலுதலின் சித்திரை நெய் எனப்பட்டது. பயறு போலுதலின் அது பயறென்னும் பெயர்பெற்றது. மீன்போலுதலின் மீனெனப்பட்டது. அறுவை என்பது வஸ்திரம்; அதன் துவாரம்போற் சிறிதாய் விளங்குதலின் சித்திரை அறுவையெனப் பட்டது. ஆடை தூசு என்பனவும் அப்பொருள்பற்றி வந்தபெயர் களாம். இருபத்தேழு நக்ஷத்திரங்களுக்குஞ் சித்திரை நடுநிற்றலின் நடுநாளெனப்பட்டது. தச்சனாகிய துவட்டா பிறந்தநாளாதலின் சித்திரை தச்சன் எனப்பட்டது. துவட்டாநாளென்பதின் பொருளு மதுவே. 'சித்திரையிருமீன் சிறுபுலிக்கண்போல்' என்பது நக்ஷத்திரமாலை. வராகமிகிரர் சித்திரையை முத்துக்குவமிப்பர். வடமொழிபிரகுவமிசம் சித்திரைக்குஇமத்துளியை இணைகூறும். நெய்த்துளி, பயறு, மீன், வஸ்திர இழைத்துவாரம், முத்து, புலிக்கண், பனித்துளி இவையெல்லாம் சிறுமையும் பிரகாசமுங் குறித்து ஒத்தகருத்தினவாதல் காண்க. தச்சன் துவட்டாநாள் என்னுமிரண்டும் வடமொழிச்சம்பந்தமாக, எஞ்சிய ஏழும் தமிழ்ப்பெயர்களாம். பூர்வத்திலே சித்திரைக்குத் தமிழரிட்டு வழங்கியபெயர் இவற்றுளொன்றாயிருத்தல்வேண்டும்.

(இன்னும் வரும்)

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

# இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

(கஅரு-ஆம் பக்கத் தொடர்ச்சி).

ஷ

நலங்கிளர் பூமி யென்னு நங்கையை நறுந்து ழாயி
னலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைந்தி லாதா
ரிலங்கையி னிருத ரேயிவ் வேழுல கத்து வாழும்
விலங்கலு மாசை நின்ற விடாமத விலங்க லேயால்.

என்னும் எக-ம் செய்யுளில், 'விலங்கலு மாசைநின்ற விடாமத விலங்கலே யால்' என்பது, 'விலங்கலுமரமுமாதி வேறுள பொருள்களெல்லாம்' எனக் காணப்படுகின்றது. விலங்கலும் திக்குயானைகளுமேயெனின் ஏனைய அஃறிணைப்பொருள்களொழிக்கப்படாமையின், பின்னையதே சிறப்புடைத்தென்க. வேறுள பொருள்—அஃறிணைப்பொருள்.

ஷ

ஆங்குவந் தடைந்த வண்ண லாசையின் கவரி வீசப்
பூங்குழன் மகளி ருள்ளம் புதுக்களி யாட நோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரிமுகக் கமல பீடத்
தோங்கிய மகுடஞ் சூடி யுவகைவீற் றிருப்பக் காணுன்.

என்னும் க௦௦-ம் செய்யுளில், 'பூங்குழன்மகளிருள்ளம் புதுக்களியாடநோக்கி—வீங்கிருங்காதல்காட்டி விரிமுகக் கமலபீடத்-தோங்கிய மகுடஞ்சூடியுவகைவீற்றிருப்பக்காணுன்' என்பது, 'பூங்குழல் மகளிராடும் புதுக்களியாட்டநோக்கி-வீங்கிருங்காதல் காட்டி வியனரிசுமந்த பீடத்-தோங்கிய வுவகையோடுமரசன் வீற்றிருப்பக்காணுன்' எனக்காணப்படுகின்றது. முன்னையதில் 'உள்ளம்' என்பதும், 'விரிமுகக்கமலபீடம்' என்பதும், உவகையென்பதும் பொருள்கொள்ளுமிடத்துப் பொருத்தமின்மையின், பின்னையதே பொருத்த முடைத்து என்க.

ஷ

ஆயன நிகழும் வேலை யண்ண லு மயர்ந்து தேருத்
தூயவ னிருந்த சூழ றுருவினன் வருத னேக்கி
நாயக னுரையான் வாயா னுனிது பகர்வெ னென்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

என்னும் ௧௦௩-ம் செய்யுளில், 'ஆயன நிகழும்வேலை' என்பது, 'ஆயவர் நவிலும் வேலை' எனக்காணப்படுகின்றது. முற்செய்யுளில் 'விழுமிதென்றார்' எனக்கூறப்பட்டிருத்தலின், 'ஆயவர் நவிலும் வேலை' எனக்கூறலே பொருத்தமுடைத்து.

## நகர் நீங்குபடலம்.

வஞ்ச மோமக னேயுனை மாநிலந்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனோ
அஞ்சு மஞ்சுமென் னருயி ரஞ்சுமால்.

என்னும் ௧௦-ம் செய்யுளில், 'அஞ்சுமஞ்சுமென்னருயிரஞ்சுமால்' என்பது, 'எஞ்சுமெஞ்சு மென்னருயி ரெஞ்சுமால்' எனக் காணப்படுகின்றது. 'உயிர் வாழ்வெனோ' என்றபின், இறந்துவிடுவேன் என்னும் பொருள்பட நிற்றலின் 'எஞ்சுமெஞ்சுமென்னருயிரெஞ்சுமால்' என்பதே பொருத்தமுடைத்து. எஞ்சுதல்-குறைதல்; ஈண்டு நீங்கும் என்னும் பொருளைத் தாற்பரியமாயுணர்த்திற்று. அஞ்சும் என்பது பிரிவாற்றாமை பற்றிவரும் இரங்கலைச் சிறப்பியாமையின் ஈண்டுப்பொருத்தமின்றென்க.

ஷை

பொன்னார் தோளான் கானே புகுதப் புகுத றவிரான்
என்ன ருயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேள்
முன்ன னொருமா முனிவன் மொழியுஞ் சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரச னறைவான்.

என்னும் எ௩-ம் செய்யுளில், 'பொன்னார் தோளான் கானே புகுதப்புகுதறவிரான்' என்பது, 'பொன்னார் வலையத் தோளான் கானே புகுதறவிரான்' எனக்காணப்படுகின்றது. 'புகுதப்புகுதறவிரான்' என இருமுறை வருதல் பொருத்த மின்மையின், பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

வந்த முனியை முகநோக்கி வாள்வேந்தர்
எந்தை புகுதற் கிடையூறுண் டாயதோ
அந்தமில் சோகத் தழுதகுரற் றனென்ன
சிந்தைதெளிந்தோய்தெரியெமக்கிவ்வென் றுரைத்தார்.

என்னும் ௬௧-ம் செய்யுளில், 'எந்தை புகுதற் கிடையூறுண் டாயதோ-அந்த மில் சோகத்தழுத குரற்றென்னை-சிந்தை தெளிந்தோய் தெரியெமக்கிவ் வென்றுரைத்தார்' என்பது, 'எந்தை எதுவுமிடையூறுண்டாயதோ-அந்தமி லாச் சோகத் தழுதகுரலாங்கறியேம்-சிந்தை தெளிந்திட நீசெப்பீதெமக்கெ ன்றார்' எனக்காணப்படுகின்றது. 'புகுதற்கு' என்னுமிடத்துப் பொருட் பொருத்தமின்மையாலும், பின்னிரண்டடியு மிசைப்பொருத்தமின்மையா லும், பின்னையதே சிறப்புடைத்தென்க.

௸

வேந்தன் பணியினாற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மிசைக்கிடந்த பாரளிப்பா னாயினான்
ஏந்து தடந்தோ ளிராமன் றிருமடந்தை
காந்த னொருமுறையே காடுறைவா னாயினான்.

என்னும் ௬௫-ம் செய்யுள், 'வேந்தன் மதிமயங்கக்கைகேசி மெய்ப்புதல்வன் பாந்தண் மிசைக்கிடந்த பார்முழுதுந்தான் புரக்க-ஏந்துதடந்தோ ளிராமன் திருமடந்தை-காந்தனரசிழந்து காட்டகத்தனாயிடவே' எனக்காணப்படுகின் றது. முற்செய்யுளில் ஈதடுத்தவாறென்றானெனக் கூறிமுடிந்தபின் இத னைக்கூறல் பொருத்தமின்மையானும், 'புரக்க' 'ஆயிட' எனஎச்சமாய் நின் று, 'கொண்டாள் வரமிரண்டு' என்பதோடு முடிதலே பொருத்தமு டைத்தா தலினாலும் பின்னையதே பொருத்த முடைத்து. 'கொண்டாள்வரமிரண் டு' என்னும்செய்யுள், இதன் பிற்செய்யுளாகக் காணப்படுகின்றது. எச்ச மாய் நின்று முடிதற்கு அதுவே பொருத்தமுடைத்தாதலினாலும்,'என்றான்' என்னும் முற்றுப் பின்முடிதலானும் பின்வருதலே பொருத்தமுடைத் தென்க.

௸

மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
ஏறின வெகுளியை யாது முற்றுற
வாறினை தவிர்கென வைய வாணையிற்
கூறிய மொழியினுங் கொடியதா மென்றான்.

என்னும் ௬௯அ-ம் செய்யுள், 'மாறினை யென்னைநீ வனம்வரேலென—வேறி யவெகுளிமற் றியாதிப்பார்வள—னறினைதவிர்கென வையனாணையிற்—கூறி யமொழியினுங் கொடியதாமென்றான்' எனக்காணப்படுகின்றது. முன்னை யது பொருள்கொள்ளுமிடத்துச் சிறந்துகாட்டாமையின், பின்னையதே சிற ப்புடைத்து. பிரிந்து என்னைநீ வனம்வரேல் என்று சொல்லுதற்கு என்

மீது மிக்ககோபம் யாது? அங்ஙனம் நீ சொல்லியது ஐயன் உன்னை பார் வளனை ஆறி நீங்குவாயென்றதினுங் கொடியதாயிருந்தது என்றான் என்க. தான் ஸ்ரீராமனுடன் பிரியாது வனம்புகுதுங் கருத்துடையனாய் முயல அதற்குத் தடைநிகழ்ந்தமையின், அத்தடைமொழியினும் இத்தடைமொழி கொடிதென்றான் என்க. இங்ஙனம் அன்றி முன்னையபாடத்தின்படி, என் மாட்டுண்டான கோபத்தை நீங்குதி என்றதினுங் கொடியதாயிருந்தது என்றல் இத்துணைச் சிறப்பின்றென்க.

ஷ்ஷி.

மறந்தா னினைவு முயிரும் மன்ன னென்னு மறுகா
விறந்தான் கொல்லோ வரச னென்னு விடருற் றழிவா
டுறந்தாய் மகனே யுலகோ டெமையு மென்னத் துணையா
மறந்தா னிதுவோ வையா வரசர்க் கரசே யென்றாள்.

என்னும் சுகூ-ம் செய்யுளில், 'துறந்தாய் மகனே யுலகோ டெமையுமென்னத் துணையாம்' என்பது 'துறந்தான் மகன்முன் னெனையுந் துறந்தாய் நீயுந்துணைவா' எனக் காணப்படுகின்றது. முன்னையது பொருள்கொள்ளுமிடத்துச் சிறிதும் பொருத்தமின்மையின் பின்னையதே பொருத்தமுடைத்து. இறந்தான் கொல்லோவரசனென்று இடருற்று அழிபவள் 'துணைவா என்னைமகன் முன் துறந்தான் பின் நீயுந் துறந்தாய் இது அறமாகுமா என்றாள்' என்னுமிடத்துப் பொருட்பொருத்தமுஞ் சிறப்புமுண்மைகாண்க.

ஷ்ஷி

தான்புனை சீரையைத் தம்பி சாத்திடத்
தேன்புனை தெரியலான் செய்கை நோக்கினான்
வான்புனை யிசையினாய் மறுக்கி லாதுநீ
யான்புகல் வனையதோ ருறுதி கேளென.

என்னும் கருஅ-ம் செய்யுளில், 'யான்புகல் வனையதோ ருறுதிகேளென' என்பது 'யான்புக லுறுதியைக் கேளென் றோதுவான்' எனக் காணப்படுகின்றது. 'புகல்வனையதோர்' என்பது பொருத்தமின்மையின் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷ்ஷி

நீட்டில களிறுகை நீரின் வாய்புதல்
பூட்டில புரவிகள் புள்ளும் பார்ப்பினுக்
கீட்டில விரைபுனிற் றீன்ற கன்றையு
மூட்டில கறவைகன் றுருகிச் சோர்ந்தவே.

என்னும் உ௧உ-ம் செய்யுளில், 'ஊட்டிய கறவைகன் றுருகிச் சோர்ந்தவே' என்பது 'ஊட்டியகறவை நைந்துருகிச் சோர்ந்தவே' எனக் காணப்படுகின்றது. களிறு முதலியவற்றைத் தத்தம் தொழின் மறந்துநின்றனவெனக் கூறி, அவற்றோடு கன்றையும் உருகிச்சோர்ந்ததென வாளா உடன்கூறல் சிறப்பன்மையின் பின்னையதே சிறப்புடைத்து. களிறு முதலியன நீட்டன் முதலிய தொழில்களைச் செய்தில. பின் அவைகள் நைந்துருகிச் சோர்ந்தன என்க.

௬

அன்ன தன்மைய ளையனு மன்னையுஞ்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
யென்னை யென்னை யிருத்தியென் றுனெனு
வுன்ன வுன்ன வுயிருமி ழாநின்றாள்.

என்னும் உ௨௪-ம் செய்யுளில், 'என்னை யென்னை யிருத்தியென் றுனெனு' என்பது 'என்னை யென்னை யிருத்தியென்றுயென்றாள்' எனக்காணப்படுகின்றது. இதன் பிற்செய்யுளில் இராமபிரான் விடைகூறுவதாகக் கூறலின், இதனிடத்தே சீதாபிராட்டி வினவியதாக 'என்னை யென்னை யிருத்தி யென்று யென்றாள்' எனக்கூறலே பொருத்தமுடைத்து.

(இன்னும் வரும்.)

சி. கணேசையர்.

---

# தமிழிலக்க வரலாற்றுச் சர்ச்சை.

சென்ற சோபகிருது வருஷம் மாசி மாதத்துச் 'செந்தமிழ்'ப் பத்திரிகையில், ஸ்ரீமாந்-அ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் "தமிழே அநேகபாஷைகளுக்கும் இலக்கம் கொடுத்தது" என்னும் வியாசம் ஒன்று எழுதி விடுத்தார். பின்னர்க் குரோதிவருஷம் ஐப்பசி மாதத்துச் சஞ்சிகையில், ஸ்ரீமாந்-கோபிநாதராயரவர்கள் அதேவிஷயத்தைப்பற்றிப்பிள்ளையவர்கள் கொண்ட கொள்கைக்கு மாறாகச் சில சங்கதிகளை வெளியிட்டனர். இராயரவர்கள் விஷயம் வெளிவருமுன் பிள்ளையவர்கள் கொள்கையே பெரும்பாலும் நம்பத்தக்கதாய்

இருந்திருக்கும்; ஆனால் இப்போதிரண்டையும் உற்றுநோக்கின், பிள்ளையவர்கள் கொள்கைக்கு அவரது யுக்திபுத்திமட்டுமே ஆதாரமாக நிற்கிறது; இராயரவர்களதோ மறுத்தற்கொண்ணாததும், சரித்திர உண்மைக்கு இன்றியமையாததுமான சாஸ்திரத்துணிவு என்பது விளங்கும். இதனைச் சிறிது ஆராய்வோம்.

உண்மையாராய்ச்சியில் சாஸனங்களாற் பெறப்படும் விஷயங்களையே தக்க சான்றெனக்கொள்ளலாமேயன்றி யுக்திவாதத்தினால் ஏற்படும் சித்தாந்தம் நிலைநிற்காது. இஃது எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. நியாயசபைகளில் அநுஷ்டிப்பதுமிதுதான். இதுவரையிற் கிடைத்த சிலாசாசனங்களுள் அசோகன்காலத்துச் சாஸநங்களே மிகப்புராதனமென்றும் அவற்றுக்குப்பின்னர்க் கற்கோயிற் சாஸனமென்றும் அவற்றுக்குப்பிற்காலத்தன பல்லவசாஸநங்களென்றும், அவற்றுக்கும் பிற்பட்டன சோழபாண்டியர்கள் சாஸனங்களென்றும் சரித்திர ஆராய்ச்சியிற் பயின்ற யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம். காலக்கிரமமாக ஏற்பட்ட இத்தகைய சாஸநங்களிற் காணப்பட்ட எண்களின் வரிவடிவுத்திரிபைப் பிள்ளையவர்கள் எவ்வாறு மறுக்கிறார்கள் என்பது புலப்படவில்லை. இப்படிச்சொன்னால் ஏலாதோ அப்படிச்சொன்னால் சாலாதோ என்று சொல்லாளுதல் சாஸ்திரீயமாய்ச் செய்யப்படும் சரித்திரவாராய்ச்சிக்கு ஏலாது. கேவலயுக்திவாதமும் இங்கேசெல்லாது. பிள்ளையவர்கள் யுக்திவாதத்தையே அங்கீகரிப்போமெனின், எங்குங்காணப்படும் கல்வெட்டிலுள்ள எண்களின் பல்வகை வரிவடிவுகள் பிள்ளையவர்கள் கொள்கைக்கும் அவர் காட்டிய படத்திற்கும் பொருந்தாதிருக்கிறதற்கு என்ன சமாதானம் கூறக்கூடும்? இதற்கு இன்னம் ஒரு யுக்தி கற்பிப்பாரோ; அன்றேல் சாஸநங்களிற் காணும் வரிவடிவுகள் பொய்யெனச் சாதிப்பரோ? அசோகன்காலத்துச் சாஸநங்கள் புராதனமென்பது, சரித்திரவாராய்ச்சியில் வெகுசிரமப்பட்டுச் சிறிது சிறிதாக அடிப்பிடித்துச்சென்று கண்டுகொண்டவிஷயம். அக்காலத்துக்கு முற்பட்ட எண்ணெழுத்துக்களின் வரிவடிவுகள் இன்னவிதமாயிருந்தனவென்பது தெரியவிடமில்லை. இருந்தால், அதனைச் சாஸநதிருஷ்டாந்தங்கொண்டுவிளக்கிக்காட்டினாலன்றிவேறுஎவ்வாற்றானும்பயன்படாது

"Encyclopædia Britanica" வில் அசோகன் காலத்திற்கு முந்தியதோர் சாஸநம் கிடைத்தது என்று கூறியிருப்பதாகப்பிள்ளையவர்கள் சொல்லுகிறார்கள். இன்னதொகுதியில் இன்னபக்கத்திருக்கின்றது என்று அவர் கூறவில்லை. இவ்வாறாயின், அப்பெருந்தொகுதிப் புத்தகக்கடலுள் எங்கேயென்று தேடுவது. இது சாத்தியமன்றென்று தெரிந்திருந்தும் பக்கம் முதலியன கூறாது விடுத்ததினால் சரித்திர உண்மையாராய்ச்சியின் கௌரவத்தைப்பிள்ளையவர்கள் சிறிதேனும் கருதினரல்லரென்று ஐயுறுகின்றோம். அசோகன் 'கலிங்கம் வெற்றிகொண்ட காலத்து அங்கு வழங்கிய தமிழிலக்கங்கொண்டானெனிலோ' என்பதற்கு இவர் என்னவாதாரங்கொண்டு சங்கிப்பது? ஆதார முண்டென்று காட்டினால் எமக்குஞ் சம்மதந்தான். இதுவே யன்றி, கலிங்கத்திலக்காலத்தில் வழங்கிவந்த பாஷையும் தமிழ்தான் என்று எவ்வாறு நிர்ணயிக்கிறார்? கொடுந்தமிழ் நாடாகிய மைசூரில் [1] அசோகமகாராஜாவின் சாஸநம் அவன் காலத்து அக்ஷரத்தில் காணப்படுவதேன்? இவனும், பிற்காலத்திய அரசர் செய்தவண்ணம், அவ்வத்தேசத்து அக்காலத்து வழங்கிய பாஷைக்குரிய எழுத்திலன்றோ எழுதுவித்திருக்கவேண்டும். பழைமைக்குப் பெயர்போன பாண்டியநாட்டின் நடுவில் [2] அசோகன் காலத்திய அக்ஷரத்தில் ஒரு சாஸநமிருப்பதற்கு என்ன சொல்லப்போகிறார் பிள்ளையவர்கள்? தென்னாட்டின்கண் அசோகன் சாஸநம் கண்டதுபோல வடநாட்டில் ஏதேனுந் தமிழ்ச்சாஸநம் இதுகாறும் கண்டதுண்டா?

மேருவைச் செண்டுகொண்டுதிரித்தும் புலிக்கொடியை இமயத்தில் நாட்டியும் வரிக்கயல்களை இமயத்தில் விளையாடுவித்தும் போந்த சோழபாண்டியர்களது தமிழ்ச்சாஸநம் அப்பிரதேசங்களிலும் இருக்கலாமே? அத்தகைய சாஸநங்கள் அசோகன் காலத்திற்கு முந்தியதாகவும் தமிழ்ப்பாஷையில் வரைந்துள்ளதாகவும் காணுதவரையிலு

1. In Siddhâpur of the Chitaldrug Taluk.
2. மதுரை ஜில்லா மேலூருக்கு 5 மைல் தூரத்திலுள்ள கீழவளவு என்னும் கிராமத்துக்கடுத்த ஒரு பாறையில் வரையப்பட்டிருக்கிறது.

ம், அசோகன் காலத்திய எண்ணெழுத்துக்களுடைய வரிவடிவுகளுக குமம், பின்னர் ஏற்பட்ட வரிவடிவுகளுக்குமுள்ள ஒற்றுமையையோ அல்லது திரிபுக்கிரமத்தையோ சற்றுற்று நோக்கின் அவை அசோகன் காலத்து வரிவடிவுகளினின்றும் பெறப்பட்டனவென்றே ஏற்படும். எண்ணெழுத்துக்களின் வரிவடிவுகள் அசோகன் காலத்துத்தான் சிருஷ்டிக்கப்பட்டனவென்றும், அதற்கு முன் ஒன்றுமிருந்திலது என்றும் யார்தான் சொல்லத்துணிவார்? ஆராய்ச்சி அதற்கு மேற்செல்லவில்லை யென்றுதான் இராயரவர்கள் கூறுவது. சாஸநங்களின் பழைமைக்கிரமத்தைக்காட்ட இவர் கூறியதைப்பிள்ளையவர்கள் சிறிதுங்கவனியாது சேரசோழ பாண்டியர்கள் பல்லவர்களுக்குப் பின்னிருந்தார்களென்று சொல்லிவிட்டார் என்று குதூகலிக்கின்றனர்! பல்லவ அரசர்கள் சாஸநங்களே சோழபாண்டியர்கள் சாஸநங்களுக்கு முற்பட்டு நிற்கின்றனவென்று காட்டக் கூறியதேயன்றி, மேற்கூறிய அரசர் வமிசங்களை முறை பிறழவைத்ததாகவெண்ணுதல் பிள்ளையவர்கள் பெருமைக்கேற்றதன்றாம். இராயரவர்கள் காட்டிய படத்தில் அசோக எண்கள் இரண்டினைத்தவிர மற்றவை இன்மைக்குக்காரணம் அவைகிடைத்திலவென்பதே. அதைத்தெரிந்துகொள்ளாது அவ்வெண்களை இல்லை என்று நிச்சயித்துக்கொண்ட பிள்ளையவர்கள் பொருட்டு இரங்குகின்றேன். இவர் தொல்காப்பியத்தின் காலம் 5000-வருஷங்களுக்கு முந்தியதென்று எங்ஙனம் உறுதிப்படுத்துவாரோ தெரியவில்லை. தம் சௌகரியத்திற்கேற்பத் தனிப்பாடற் செய்யுட்களையும் பழைமைக்கு மேற்கோளாய்க்கொள்ளும் பிள்ளையவர்களுக்குச் சரித்திரவிசாரம் ஒரு பொருட்டாகாது. அரை, கால், அரைக்கால் என்பன வடமொழி வழக்கைத் தென்மொழியிலும் வழங்கியிருக்கிறதேயொழிய இம்மொழிக்கே யுரியனவல்ல. தமிழுக்கேயுரித்தானவை ஒன்றொழிபத்து (ஒன்பது)என்பன போன்றவை யென்றார் பிள்ளையவர்கள். ஏகோனவிம்சதி, பாதோனகாதசம் முதலியவடமொழி வழக்கைப் பிள்ளையவர்கள் ஓரார் போலும்! இவை நிற்க.

ஒன்பது என்பது ஒன்றொழிபத்து என்று செவ்வனே விளக்கியவர் பத்தொழிநூறு, நூறொழி ஆயிரம் என்பன, பன்னூறு, நுவ்

வாயிரம் என்பனபோற்றிரியாது தொண்ணூறு, தொள்ளாயிரம் என்றெவ்வாறுயிற்று என்பதை விளக்காமல் வாளாவிடுத்தனர்.

இராயரவர்கள் தமிழிலக்க விஷயமாய்ச் சாஸநவாராய்ச்சியால் தமக்குத்தெரியவந்த சில உண்மைகளைச் செந்தமிழ்வாயிலாக வெளியிட்டாரேயன்றிப் பிள்ளையவர்களோடாயினும் மற்றெவர்களோடாயினும் வாதுசெய்து வெற்றிபெறவெண்ணி வந்தவரல்லரென்பது அவர் வியாசத்தால் நன்கு விளங்கும்: அப்படியேயிருப்பினும், பிள்ளையவர்கள் வாசாலகத்தின் முன் 'பண்டிதன்' வாய்மொழி பயன்படப்போகிறதா? இராயரவர்கள் சாஸ்திரவாராய்ச்சியால் தாம் கண்ட உண்மைகளை கண்டதுகண்டபடியே கூறுகின்றதுபோலவே பிள்ளையவர்களும் கண்டபடி யெழுதுவதாயின், அஃது, எவ்வாற்றானும் நல்லறிஞர் அங்கீகரிக்கற்பாலதாகும். தமிழுக்கு எவ்வாற்றானும் பெருமைதரவேண்டுமாதலால், இராயரவர்கள் சொல்லும்வழி அதற்கு நல்லதோ அன்றிப்பிள்ளையவர்கள் வழியே நல்லதோவென்பது செந்தமிழபிமானிகள் தெரிந்துகொள்வாராக. இனி இவ்விஷயத்தைக்குறித்து எழுதுவது எமக்கும் 'செந்தமிழ்'க்கும் எவ்விதத்திலும் பெருமையேயில்லையென்பது துணிந்து இதனோடு விடுக்கின்றோம்.

நீலகிரி,
25–5–1905.

கோ. வெங்கோபராவ்,
அஸிஸ்டேண்டு எபிகிராபிஸ்டு.

---

# தருக்க சூத்திர முதற்பாடம்.

(உ-ம் தொகுதி, ருசஎ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

மேலும்,

(1) மேற்கோ டம்முண் மேவுறு பொருளின்
றன்மையா லொப்பறி தருவினை யுளதே. (த-சூ)

(2) அதுதான்
மூவகை யாக முயங்கிடு மென்ப (த-சூ)

(3) இன்றி யமையாத ததனொடு தற்செய
லென்றுமுடியா ததென்பவோர் மூன்றே (த-சூ)

யாதாமொரு கொடுத்த விஷயத்தைக்கொண்டு உகரமேற்கோள் வரையுங்கால் அதனது எழுவாய் உடன்பாடாக விடுக்க வேண்டியது மிக அவசியம். ஆதலினால் இஃது இன்றியமையாதது.

அவ்வாறே எகரமேற்கோளினது எழுவாய் உடன்பாடாய் இருத்தல் வேண்டுமென்பது என்றும் முடியாதது. ஏனெனில் அதன் எழுவாய் எப்பொழுதும் எதிர்மறையே. தற்செயலின்கண்ணுறும் விஷயம் நேரினும் நேரும். நேராதொழியினு மொழியும். எங்ஙனமெனில்.

"குளம்புடை மிருகங்கள் தீனியைக் கறித்துண்ணுமவைகளாம்"
இம்மேற்கோள் நிற்கும் நிலையில் பொதுவுடன்பாடாகவேனும், சிறப்புடன்பாடாகவேனும் யாம் மாற்றிக்கொள்ளலாம்.

பொது உடன்பாடாக்கில்,

(1) "எல்லாக்குளம்புடை மிருகங்களும் தீனியைக் கறித்து உண்ணுமவைகள்" என்றும்,

சிறப்புடன்பாடாக்கில்

(2) "சிலகுளம்புடை மிருகங்கள் தீனியைக் கறித்து உண்ணுமவைகள்" என்றும் இருவகையாய்த் திருப்பலுறும். ஆனால் சில குளம்புடை மிருகங்கள் மாத்திரந் தீனியைக் கறித்துண்ணுமவைகளெனப் பிரத்தியக்ஷ அனுபவமாயிருத்தலால் "எல்லாக்குளம்புடை மிருகங்களும் தீனியைக்கறித்துண்ணுகின்றன" என்பது பிரத்தியக்ஷ விரோதமாயிருக்கின்றது: அப்படி விரோதமா யிருக்கின்றதென்பதை வேறு சரித்திர அறிவு கொண்டு அறியவேண்டியதாயிருக்கின்றது. ஈண்டுக்கறிக்குந்தன்மை சிலகுளம்புடை மிருகங்கள்பால்நேர்ந்தும், வேறு சில குளம்புடை மிருகங்கள்பால் நேராமையுங் காண்டலால் இதுதற்செயல். ஈண்டு யாம் ஒவ்வொரு சாத்திரத்தின் உண்மையாது என்று கவனித்துத்தருக்கம் புரியச்செல்லுதல் அடாத காரியம். பின்னை மற்றென்னேவெனில் நமக்குக்கொடுத்த மேற்கோள்களைவைத்து முடிவிர்த்துக்கொள்ளுதலே நமது கடமை. மேலியாம்,

ஈரிரண் டாக வியம்பு மேற் கோளு
ளொன்றினை யொன்றாய் மாற்றுத லுரைப்பாம் (க-சூ)

(2) இதுகாறுங் கூறியவாற்றல் நால்வகை மேற்கோள்களின் றன்மையை ஒருவாறுணர்ந்தாம். இனி அவைகளொவ்வொன்றும் பொருளில் வேறுபடாமனின்று பலவிதமாற்றங்கள் எய்துந்தன்மையையுரைப்பாம். மேற்கோள்கள் மாறுதலென்பது யாதெனின் அவைகளின் எழுவாய் பயனிலைகள் இடம் பெயர்ந்து நிற்குமாறு மாற்றுதலாம். எங்ஙனமெனிற் காட்டுதும்.

உதாரணம் (1) "சில உலோகங்கள் தெரிக்கும் பொருள்களாயிருக்கின்றன"

என்பதை (2) "சில தெரிக்கும் பொருள்கள் உலோகங்களாயிருக்கின்றன" என்று மாற்றலாம்.

இதில் முதலாவது மேற்கோள் மாற்றப்படு மேற்கோள். மற்றையது மாற்று மேற்கோள்.

63. மாற்றப்படு மேற்கோள் உண்மை மேற்கோளாகவிருந்தால் மாற்று மேற்கோளும் அவ்வாறிருத்தல் வேண்டுமென்பது அத்தனை அவசியமின்று. சில சந்தர்ப்பத்திலவ்வாறு நிகழினு நிகழலாம். மேலே கூறியாங்கு இரண்டு மேற்கோள்களையுங் கவனித்துப் பார்க்குங்கால் முதன் மேற்கோளின் அருத்தத்தையே இரண்டாவது மேற்கோளுங்கொண்டு நிற்றலைக்கண்டாம். இதைத்தான் "தனிமாற்றம்" என்று கூறுவர். ஏனெனில் ஈண்டுப் புதுமேற்கோள் ஒன்றுறுமாறு எழுவாய் பயனிலைகளைமாத்திரம் மாற்றப்பட்டதே தவிர வேறின்று. ஆதலினாலெனக.

ஆகையால் சிறப்புடன்பாட்டு மேற்கோளொன்றை(ப) மீண்டும் சிறப்புடன்பாட்டு மேற்கோளாக மாற்றும் மாற்றமே தனிமாற்றமானமை காண்க.

64. மாற்றுங்கால் மேற்கோள்களின் றன்மையையும் மாற்றப்படு மேற்கோளிற் பங்கீடு செய்தவைகளைத்தவிர வேறுஉறுப்புகளை மாற்றுமேற்கோளில் பங்கீடு செய்தல் கூடாது என்பதையும் யாம் கவனித்தல் வேண்டும்.

65. பொது எதிர்மறை மேற்கோளையும் மீண்டும் பொது எதிர்மறை மேற்கோளாக மாற்றலாம். எங்ஙனமெனில்,

"எல்லா உலோகங்களும் செயற்கைப்பொருள்களுள் வாரா" என்பதை,

"செயற்கைப்பொருள்களுள் வாராதவைகள் உலோகங்களாயிருக்கின்றன" என்று மாற்றலாம்.

இதனை முற்காட்டிய வட்டங்களி னமைத்துணர்க.

66. பொது உடன்பாட்டு மேற்கோளினை (உ) மாற்றுதல் மிக கஷ்டதரமாகும். எங்ஙனமெனில் "எல்லா உலோகங்களும் இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன" என்பதை மாற்றுங்கால் "எல்லா இயற்கைப்பொருள்களும் உலோகங்களாயிருக்கின்றன" என்றுறும்.

இம்மாற்றத்தாலுற்ற பயன் ஆக்ஷேபிக்கத்தக்கதாயிருக்கின்றது. வெனெனில் இயற்கைப்பொருள்கள் யாவும் உலோகங்களுள் வாராமை பற்றியென்க. அன்றியும் யாம் முன்னர்க்கூறியவாற்றால் உகரத்தின் அதாவது பொது உடன்பாட்டு மேற்கோளின் பயனிலை சிறப்புத்தன்மையுற்றதெனக்கண்டாம். அதாவது காணப்படும் உலோகங்களெல்லாம் இயற்கைப்பொருள்களின் சிலபாகங்களேயன்றி வேறன்று என்று உணர்ந்தறிதலாம். ஆகையால் மேற்கூறிய இரண்டாவது மேற்கோள் "எல்லா உலோகங்களும் சில இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன"என்றிருத்தல்வேண்டும். இதை மாற்றுங்கால்,

"சில இயற்கைப்பொருள்கள் எல்லா உலோகங்களாயுமிருக்கின்றன" என்று மாற்றி யுணர்ந்து கொள்க.

இவ்வித மாற்றமுறுங்கால் பயனிலையோடு சேர்ந்துவரும் சில, எல்லா, என்ற வார்த்தைகளை விடுத்தல் மரபாம். அதுபற்றி "சில இயற்கைப்பொருள்கள் உலோகங்களாயிருக்கின்றன" என்றுனமை காண்க. இதைத்தான் வரையறுமாற்றமென்று கூறுவர். இம்மாற்றத்தால் பொது உடன்பாட்டு மேற்கோள் சிறப்புடன்பாட்டு மேற்கோளானமை காண்க.

67. பங்கிடில்லா எழுவாயையுடைய சிறப்பெதிர்மறை மேற்கோளை (ம) மாற்றுதலும் மிகக்கஷ்டமேயாம். எங்ஙனமெனில்,

"சில இயற்கைப்பொருள்கள் உருவமில்லா வஸ்துக்களாயிருக்கின்றன" என்பது

"எல்லா உருவமில்லா வஸ்துக்களும் இயற்கைப்பொருள்களாயிருக்கின்றன" என்று மாற்றமுறும். இஃது ஆக்ஷேபிக்கத்தக்கதே. எங்ஙனமெனில் மாற்று மேற்கோளில் "இயற்கைப்பொருள்கள்" என்பது பங்கீடு செய்யப்பெற்றிருக்கின்றது. ஆனால் மாற்றப்படு மேற்கோளிலே அங்ஙனமில்லாமை கண்டுணர்க.

"சில உருவமில்லா வஸ்துக்கள் இயற்கைப் பொருள்களாயிருக்கின்றன" என்பதும் ஆக்ஷேபிக்கத்தக்கதே. ஆகையால் இந்த (ம)கர மேற்கோள் தனிமாற்றம் அல்லது வரையறுமாற்றத்தால் மாற்றப்படாததாகி புதுமுறையாகிய எதிர்மறைமாற்றத்தால் மாற்றப்பெறவேண்டியதாயிருக்கின்றது.

அது முன்பரிபாடைமொழிகளுட் கூறியாங்குச் சிறப்பெதிர்மறை மேற்கோளை முதலில் உடன்பாட்டுமேற்கோளாக மாற்றிப் பின்னதனைத் தனிமாற்றத்தால் மாற்றுதலாம்.

எதிர்மறையுருபை சகதமொழியோடு கூட்டிக்கூறுதற்குப்பிரதியாய் பயனிலையோடு கூட்டிக்கூறில் அஃதாவது உருவமில்லா வஸ்து என்பதை அருவவஸ்து எனக்கூறில் முற்கூறிய மேற்கோளானது

"சில இயற்கைப்பொருள்கள் அருவவஸ்துக்களாயிருக்கின்றன" என்றாகிப் பின் தனிமாற்றத்தால் மாற்றுங்கால்,

"சில அருவப்பொருள்கள் இயற்கைப்பொருள்களாயிருககின்றன" என்று ஆகும்.

இதனாற் சிறப்பெதிர்மறை மேற்கோள் எதிர்மறை மாற்றத்தால் மாற்றப்பெற்றமை காண்க.

(68) மேலும் உகரமேற்கோளை எதிர்நிலை மாற்றத்தால் மாற்றலாம். உதாரணமாக.

"எல்லா உலோகங்களு மியற்கைப் பொருள்களா யிருக்கின்றன"

"எல்லா உலோகங்க ளல்லாதவைகளும் இயற்கைப்பொருள்க ளில்லாதவைகளாயிருக்கின்றன."

என்று மாற்றப்பெற்றால் அங்கீகாரமில்லாப் பொருளைத் தருகின்றது. பின் எவ்விதத்தாற் பயன்பெறுமாறு செய்விக்கலாகுமெனில், அதுதான்,

> "உகரப் பயனிலை யோடின்மை வைத்ததை
> எழுவா யாக்கிமு னெழுவாய் மாற்றிப்
> பொதுவுடன் பாடாய்ப் பொருத்தலிற் பெறுமே" த. சூ.

எங்ஙனமெனில்,

உலோகத்தைக் குறிக்கும் வட்டத்திற்கு வெளியிலுள்ள வஸ்துக்கள் வேறான இயற்கைப்பொருள்களாயிருப்பதால் அதனை அங்கீகரிக்கத்தக்கதன்றெனக் கூறப்பட்டது. கீழ் வட்டங்களாற் காண்க.




(69) இவ்வெதிர்நிலை மாற்றம்.—

சிறப்புடன்பாட்டு மேற்கோள், சிறப்பெதிர்மறை மேற்கோள், பொது எதிர்மறை மேற்கோள் இவைகளைமாற்ற உபகரித்தற்கேற்றதல்லாததென்றறிக.

ஆனாற் பொதுஎதிர்மறை மேற்கோளினை, இன்மைமொழியைப் பயனிலையோடு சேர்த்தலால் பொதுஉடன்பாடாக்கி இவ்வெதிர்நிலை மாற்றத்தைப் பிரயோகித்து மாற்றலாம். எங்ஙனமெனில்,

"மனிதர்கள் முற்றறிவுடையவர்க ளல்லர்"

இதை உகரமாக்குங்கால் "எல்லா மனிதர்களும் முற்றறிவுடையவர்க ளல்லர்" என்றாக்கி,

எதிர்நிலை மாற்றம் மாற்றுங்கால்,

"எல்லாச் சிற்றறிவுடையவர்க ளெல்லாரும் மனிதர்களல்லர்"

ஈண்டுச் சிற்றறிவுடையவர்க ளெல்லார்" என்பதை முற்றறிவுடையவர்க ளென்றாக்கி,

"எல்லா முற்றறிவுடையவர்களு மனிதர்களல்லர்"

அல்லது,

"முற்றறி வுடையவர்க ளில்லார் மனிதர்கள்" என்று ஆம். இது முன்னைய மேற்கோளின் தனிமாற்றமானமை கண்டுகொள்க.

மேற்கோளியல் முற்றிற்று.

S. பால்வண்ணமுதலியார்,

திருநேல்வேலி.

---

உ

# தமிழ்ப்பெருமை.*

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

இங்ஙனம் ஒப்புயர்வு உரைத்தற்கு அரிதெனப் புகழப்பட்ட தமிழ் மடந்தை ஆங்கிலம் என்னும் பெருவெள்ளத்து வீழாமல் காக்கின்ற பெருமானாகிய பாண்டித்துரையவர்கள் முன்னிலையிலே, கல்விக்கடலின் கரைகண்ட புலவோர் வைகும் இக்கழகத்திலே யானுங் கற்றவன்போல நடித்துச் சிலமொழி கூறுவான் விரைந்து புகுந்தனன். "கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு" என்னும் மூது

---

* இது, மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் நான்காம் வருஷோற்சவ தினத்தன்று சென்னைத் தபாலிலாகாத் தலைவர் ஸ்ரீமது-வி. கனகசபைப்பிள்ளையவர்கள் செய்த உபந்யாசமாகும்.—பத்திராசிரியர்.

ளையை நினைந்து நாணினேன்: ஆயினும், தமிழ் அணங்கின்மீதுள்ள ஆராக்காதல் எனது நாணினை அகற்றி உள்ளத்தைக் கவர்ந்தெழுந்து ஓங்கியதால் இவ்வாறு துணிந்தனன் என்றறிக. இத்தமிழ் நங்கை எவ்விடத்திலே பிறந்தனள்? யாவராற் பாராட்டிச் சீராட்டி வளர்க்கப்பட்டனள்? இப்பொழுது என்னபருவம் அடைந்தனள்? என்னும் வினக்களுக்கு உண்மையான விடை பகர்வதற்கு யான் பலநாளாக ஆராய்ந்து அறிந்தவற்றுள் "மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்ட" தொழிய, எஞ்சியவற்றுள் இச்சங்கத்திற்கு ஏற்பன சிலவற்றை இவ்விடம் இயம்புவேன்.

மேற்சொன்ன வெண்பாவிலே கூறிய பொருள் யாதெனின், ஓயாது ஒலிக்கும் கடலாற் சூழப்பட்ட இவ்வையத்திலே மூடியிருக்கும் இருளை நீக்குவன இரண்டு உள்ளன. மின்னலைப்போன்று ஒளி வீசும் ஒற்றையாழித்தேரின்மீது செல்லும் செஞ்ஞாயிறு ஒன்று. மற்றது இணையற்ற இனியதமிழ் என்றார். இருள் ஒன்றை விலக்குவதற்கு இரண்டுபொருள் வேண்டுமோ? செங்கதிர் ஒன்று போதாதோ? எனின், இருள் புறவிருள் அகவிருள் என இருவகைத்து என வருவித்து, செங்கதிரோன் உலகத்துப் புறவிருளை நீக்குவதுபோலச் செந்தமிழும் மாந்தரது அகவிருளை அகற்றும் என்க.

இனி அகல உரைப்பின் "ஓங்கல்" என்னும்மொழி, ஓங்குதல் என்னும் தொழிலையும் ஓங்கியிருக்கும் பொருளையும் குறிக்கும். இச்செய்யுளிலே "ஓங்கலிடை வந்து" எனக் கூறியிருத்தலால் இவ்விடத்து "ஓங்கல்" என்னும் சொல் ஓங்கி வளர்ந்துள்ள ஒன்றைக் குறித்தது எனப் பொருள்கோடல் பொருத்தமாகும். உலகத்தின் கண்ணே ஓங்கி உயர்ந்துள்ளவற்றுள் மலைகளே மிகவும் உயர்ந்தனவாதலால் "ஓங்கல்" என்பது மலை எனப் பொருள்படப் பெரும்பான்மை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே "ஓங்கலிடைவந்து" என்னும் தொடர் மலையினிடத்தே தோன்றி எனப்பொருள்படும்.

ஞாயிறும் தமிழும் ஒரே மலையினிடத்தேதோன்றிற்றோ? எனின் அற்றன்று, உதயகிரியினிடத்தே சூரியன் தோன்றுவதுபோலப் பொதியமலையினிடத்தே தமிழ் தோன்றிற்றென்பர்.

"தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்."

என்றார் அமிர்தசாகரனார். இவ்வாறே, வில்லிபுத்தூரார் விருத்தப் பாவிலே இயற்றிய பாரதத்திற்கு அவர் மகன் வரந்தருவார் பாடிய பாயிரத்திலும்,

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரோன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.

என்றும்,

"அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங்கு" என்றும் புகழ்ந்து தமிழ் அணங்கினுக்குப் பல்லாண்டு கூறினர். அருந்தவராகிய அகத்தியர் ஆரியவர்த்தம் என்னும் வடநாட்டைவிட்டுத் தெற்கு நோக்கி விந்திபமலையைக் கடந்துவந்து கடற்கோடியிலுள்ள பொதியப் பொருப்பிலே இருந்து தமிழிலே முதனூல் இயற்றினர் என்று கொளல்வேண்டும். பாண்டியவரசர் பலர் தமிழ்நங்கையைப் போற்றித் தேற்றி வளர்த்தனர் என்றும், புலவர் வீற்றிருந்த சங்கப்பலகையிலே இருந்து குழலினும் யாழினும் இனியமழலைச்சொல்பயின்று மதுரையிலே மறைஞானசம்பந்தர் சமணரோடு வாதுசெய்யுங்காலத்திலே வைகையாற்றிலே இடப்பட்ட ஏட்டிலே தவழக்கற்றனள் என்றும், அவ்வேடு ஆற்றுப்பெருக்கிற்கு எதிர்த்துச் சென்றதனாலும் பின்பு அச்சம்பந்தர் நெருப்பிலே இட்ட ஏடும் வாடாது கருகாது இருந்ததினாலும் தமிழ்நங்கை தனது தெய்வத்தன்மை தோற்றுவித்தாள் என்றும் கூறினர். மேலும் தமிழ் அணங்கு இன்னும் பேதைப் பருவம் கடவாது பூதேவியின்மருங்கிலே நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் வளருகின்றாள் என்றார்.

அகத்தியர் இருக்குவேத சுலோகங்கள் இயற்றிய இருடிகளில் ஒருவர் ஆகையால் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்டு இருந்தனர் என ஏற்படும். வரந்தருவார் தமது புரவலனாகிய ஆட்கொண்டான் என்னும் கொங்கர்குலக் குரிசிலைச் சிறப்பித்து,

தென்னாட்டில் வடநாட்டிற் குணநாட்டிற் குடநாட்டிற் றெவ்வரோட
... ... ... ... கண்டன்வேங்கை
எந்நாட்டு மெழுதியிவன் திருமரபோர் பெற்றவிசை யாவர் பெற்றார்.

எனக்கூறியிருத்தலால், கண்டன் அல்லது கண்டகோபாலன் என்னுஞ் சோழமன்னன் அரசாட்சியிலே வரந்தருவார் வாழ்ந்ததாகச் சொல்லலாம். கண்டகோபாலன் ஏறக்குறைய அறுநூறு ஆண்டுக்கு முன்னே சோழமண்டலத்திலே அரசாண்டதாகத்தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுக்களால் தெரியவரும். ஆகவே வரந்தருவார் காலத்திலே தமிழ்தோன்றி இரண்டாயிரத்து நானூறு ஆண்டு சென்றது எனத் துணிந்து கூறலாம். இத்தனை ஆண்டு கடந்தும் தமிழ் அணங்கு இன்னும் பேதைப்பருவம் கடந்திலள் என்றது எங்ஙனமெனின் :— மக்களுக்கு ஓராண்டு தேவர்களுக்கு ஒருநாள் என்பது புராணிகர் கூற்றாதலால் 2,400 ஆண்டும் 2,400 நாளாகவே கணக்கிட்டால் தமிழணங்கு வரந்தருவார் காலத்திலே பேதைப்பருவத்தாள் என ஒப்புக்கொள்ளலாகும்.

(இன்னும் வரும்.)

---

உ

# ஸ்ரீரங்கம் தமிழ்ச்சாஸனம்.

இவ்வற்புதசாஸன* விஷயத்தை எனக்கறிவித்தவர் என் நண்பர் ஸ்ரீமத்-து. அ. கோபிநாத ராயரவர்கள், எம். ஏ., அதற்கு அவர்கள் ஒரு புகைப்படமும் எனக்குத் தந்துதவினர். ஸ்ரீரங்கம் உடையவர் (இராமாநுஜர்) சந்நிதிக்கு அடுத்தமுன்பக்கத்துள்ள நான்காம் பிராகாரத்துத் தென்சுவரின்கீழோரத்தில் இச்சாஸனம் வரையப்பட்டுள்ளது. இது நல்லநிலையில் இருக்கின்றது. இஃது எழுதப்பட்ட தமிழ் கி-பி 12-ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியைச் சார்ந்தது. எழுத்

---

* இச்சாஸனம் இதன் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது. இதனிடத்துள்ள அற்புதமாவது, ஓர் பிரபுவினிடத்து அன்புள்ள வேலைக்காரர், அப்பிரபு இறந்தபின்னர்த் தாமும் உடனே உயிர்நீத்தலாம். இவ்விஷயம் பின்னால் வைத்து விளக்கப்பட்டுள்ளது.

துக்கள் சிறிது கவலைத்தாழ்வாக எழுதப்பட்டனவாகக் காணப்படுகின்றன. "மாராயநெந் சேமநாந கடவேநாகவும்" என்ற சொற்றொடரிற் காணப்படும்வண்ணம் நகர, னகரங்கள் குழம்பிக்கிடக்கின்றன. இதனை எழுதியவன் பெரும்பான்மை நகரப்பிரயோகத்திற் பிரியமுடையவனாகத் தோற்றுகின்றான். "எங்கள்ளம்மைக்கு, மிணளங்நாவேன்" என்றவற்றிற் காணப்படும்வண்ணம், பலவெழுத்துக்கள் அநாவசியமாகவே உபயோகித்திருப்பது மற்றோர் விசேஷம். சிற்சில இடங்களிற் சில எழுத்துக்கள் விடப்பட்டுமுள்ளன. உ-ம்.—உடந்டெ [வ*] பறையற்கு [கொ*] டுத்து. மிணட்டி, மிணளன் என்ற பதங்கள் பிழைப்பட்டன என்பது விளங்கும்.

தன் வேலைக்காரரிடம் இத்துணை அற்புதபக்தியும் விசுவாசமும் உண்டுபண்ணின புருஷன், அவ்வூர் அதிபதியாகிய அகளங்கநாட்டாழ்வார்* என்பது இச்சாஸனத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றது. இவர் ஸ்ரீராமாநுஜருடைய சிஷ்யராகக் கருதப்படுகின்றார். இவருடைய ஊழியக்காரர்கொண்ட பிரதிக்ஞை வரையப்பட்டசாஸனம், அவரது ஆசாரியராகிய ஸ்ரீராமாநுஜரது கோயிலுக்கு நேரெதிரே அமைக்கப்பட்டிருத்தல், மேற்கருதியதற்குச் சிறிது ஆதாரமாகும். குருபரம்பரை, இராமாநுஜ திவ்யசரிதை என்ற இரு பிரபந்தங்களிலும் அகளங்கநாட்டாழ்வான் அவரதுசிஷ்யர்களில் ஒருவரென்றும், இச்சிஷ்யர்களின் கடமை பிரதிபக்ஷநிரஸனம் (குருபரம்பரை, pp. 16, 190; ராமாநுஜார்யதிவ்யசரிதை pp. 249, 251) என்றுங்கூறப்பட்டுள்ளன. அவ்வாறு ஒருவர் இருந்திருக்கும் பக்ஷத்தில், இச்சாஸனத்திற் கூறப்பட்டவரும், இராமாநுஜர் சிஷ்யரும் வெவ்வேற மனுஷ்யராயிருக்கலாம். ஏனெனில், இச்சாஸனத்திற் கண்ட அகளங்கநாட்டாழ்வார் என்பவர், திருவானைக்கா என்ற ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தின் கீழ்ப்பக்கத்தின்கண்ணுள்ள 2-வது உட்கோபுரத்தின் தென்பக்கத்தில் வரையப்பட்டிருக்கும் ஓர் உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டவராகக் காணப்படுகிறார்.† இவ்வுடன்படிக்கை கி-பி. 1178-ஆம் வருஷம்

---

* "அகளங்கன்" என்பது விக்கிரமசோழனுக்குப் பிரதிநாமம்.

† கவர்ன்மெண்டு சிலாசாஸனபரிசோதகர் இச்சாஸனத்தை எடுக்கத்தவறினமையால், மூன்றாங்குலோத்துங்கன் ஆளுகையில் இன்னவருஷத்தில் இந்தஉடன்படிக்கைநடந்தேறியதென்று சொல்லக்கூடிய நிலையில் இல்லை.

சிங்காதனமேறிய மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்தது. இராமாநுஜர் சகம். 1059 அதாவது கி-பி. 1137-ஆம் ஆண்டில் பரமபதமடைந்தவர். ஆகையால் இராமாநுஜர் வியோகமான காலத்துக்கும் 3-ஆம் குலோத்துங்கன் சிங்காதனமேறிய காலத்துக்கும் இடையில் 41-வருஷம் ஆகின்றது. குருபரம்பரைக் கிரந்தத்தை நாம் நம்பும்பக்ஷத்தில் இராமாநுஜர் ஜீவியகாலத்திலேயே மற்றமதங்களை மறுப்பதற்குத் தக்க யோக்கியதை உடையவரென மதிக்கப்பெறுதற்கு, அவர் வியோககாலத்தில் அகளங்கநாட்டாழ்வான் வயோதிகராய் இருந்திருத்தல்வேண்டும். 3-ஆம் குலோத்துங்கனது நீடித்த அரசாட்சியில், இவ்வுடன்படிக்கை முடிதற்குச் சிலவருஷங்கள் சென்றன என்னவைத்துக்கொண்டாலும், குருபரம்பரையில் பேசப்பட்ட அகளங்கநாட்டாழ்வானுக்கும், ஜம்புகேசுவரவுடன்படிக்கையிற்குறிக்கப்பட்டவர்க்கும் நீடித்தகாலம் இடைப்படுதலால், இவர்களை ஒரேமனுஷ்யரென்பது கூடாததாகும். இராமாநுஜர் சிஷ்யரொருவர் இருந்திருக்கும் பக்ஷத்தில், அவர் நம் சாஸனத்துக் குறிக்கப்பட்டவரைத் தவிர்த்து வேறொருவராக இருந்திருத்தல்கூடும். வைஷ்ணவ பிரபந்தங்களிற் காண்கிற காலநிர்ணயத்தைக் குறித்த இதரபிழைகளை உத்தேசிக்கும்போது, பற்பலகாலத்துக் கதைகளை ஒரேபெரிய மனுஷனுக்கேற்றிப் பொருத்துகிற இயற்கைவழக்கப்படி, குழப்பத்தால், பெரியமனுஷனொருவனுக்குத் தப்பானகாலத்தை ஏற்படுத்தியிருத்தல்கூடும் என்பது சகஜமான தர்மமேயாம். இராமாநுஜர்சரித்திர சம்பந்தமான ஓர் உதாரணத்தைக்கொண்டு இப்பிழையை விளக்கிக்காட்டலாம். அஃதாவது :—1009-சகவருஷத்தில் சென்னிகுலோத்துங்கன் என்பவனாற் சீர்குலைக்கப்பட்ட சித்திரகூடக்கோயிலிலிருந்து வெளியேற்றப்பட்ட கோவிந்தராஜப்பெருமாள் விக்கிரகத்துக்கு,கீழைத்திருப்பதியில் ஒருகோயில்கட்டும் வண்ணம் இராமாநுஜர் கத்தியதேவராயனைத் தூண்டுதல் செய்தனர் என்பதே. காலவழுவிஷயத்தில், இஃது ஒரு பெருந்தவறும் என்பது பின்கூறப்படும் விஷயங்களால் தெளிவாகும். 3-ஆம் இராஜராஜனுடைய ஆளுகையின் 5-வது, 6-வது வருஷங்களில் கத்தியதேவயாதவராயனுடைய சாஸனங்கள் காணப்படுகின்றன. அவ்விராஜராஜன் பட்டத்துக்குவந்தகாலம் கி-பி. 1216.

ஆகையால், 1009-சகவருஷத்தில் ஆட்சிபுரிந்த குலோத்துங்கன் காலத்தில் கத்தியதேவயாதவராயன் இருந்திருத்தல் முடியாதென்பது திண்ணம்.

இனி, ஓர் பிரபு இறக்குங்கால் அவர் வேலைக்காரர் தற்கொலைபுரிந்துகொள்ளும் விரோதவழக்கத்தின் கருத்தும் காரணமும் விளங்கவில்லை. ஆனால், இவ்வழக்கம் மிகச் சாதாரணமாகவே வழங்கிவந்திருக்கிறது என்பது மைசூர் சம்ஸ்தானத்துச் சாஸனங்கள் பலவற்றால் விளங்குகின்றது. திருச்சிராப்பள்ளியில் இன்றும் "நாட்டாழ்வார்" என்று கள்ளரில் ஒருவகுப்பினர் இருக்கிறார்கள். இப்பெயர் தற்காலம் "நாடாவார்" என மருவிநிற்கின்றது. அவர்களில் அநேகர் வைஷ்ணவப்பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

## சாஸனம்.

### (i)

1. ஸஸ்திஸ்ரீ [1]விற்றிருந்தாந் [2]செமனாந அகளங்கநாடாழ்வா (ர்)
2. ற்கு திருவரங்கத்து [3]கைகொளமுதலிகளில் நாயநான அழயம—
3. ணவாளமா [4]ராயநெந் இவற்கு உடன் [5]வெளையாகச்சாவக்—
4. [6]கடவெநாகவும் இவற்கு பிந்பு [7]சாவாதெ இரு[ந்தெ]நாகில் எந்—
5. மிணாட்டியைப் பறையற்குக் குடுத்து எங்கள்ளம்மைக்கு [8]நானெ—
6. [9]மிணாளந்நாவென்—

### (ii)

I. ஸஸ்திஸ்ரீ விற்றிருந்தாந் செமநாந அகளங்கநாடாழ்வாற்கு திருவரங்—

---

1. வீற்றிருந்தான்.
2. சேமனான.
3. கைக்கோளமுதலிகளில்.
4. ராயனேன்
5. வேளை.
6. கடவேனாகவும்.
7. சாவாதே இருந்தேனாகில்
8. நானே
9. மணாளனாவேன்

2. கத்துக் கைககொளரில்ரியாநாந கிடாரத்தரையனெங் இவற்கு உட—

3. ங்டெ[வ*]ணேயாகச்சாவக்கடவெநாகவும் இவற்குபிங்பு சாவாதெ இருங்—

4. தெநாகில் எங்மிணு..டியை ப்றையற்து[கொ*]டுத்து எங்கள் ளம்மைக்குநா—

5. நெமிணுளநாவெங்

## (iii)

1. ஸ்வஸ்திஸ்ரீ விற்றிருந்தாங் செமநாந அகளங்கநாடாழ்வாற்கு

2. திருவரங்கத்துக் கைக்கொளரில் உலகநாந [1]அழகாணேச்சொ—

3. மம (ர*) ராயநெங இவற்கு உடங்வெளேயாகச் சாவக்கடவெநாகவு—

4. ம் இவற்கு பிங்பு சாவாதெ இருங்தெநாகில் எங்மிணட்டியைப்ப—

5. றையற்குக் குடுத்து எங்கள்ளம்மைக்கு நாநெமிணுளநா—

6. வெங்—

எம். நாராயணசாமி ஐயர்.

---

1. அழகாணேச்சோமமாராயன்

# புத்தகக் குறிப்பு.

---

ஸ்ரீவாணீவிலாஸினீ ;—இப்பெயர்கொண்ட மாதாந்த பத்திரத்தின் முதற்சஞ்சிகை கிடைக்கப்பெற்றோம். தமிழ்நாட்டினுலவும் பத்திரிகைகளிலெல்லாம், இஃது அதிக அளவும் வனப்புங்கொண்டு, பலபடங்களுடன் சிறந்தகாகிதத்தில் அமைந்து ஒளிர்கின்றது. இது ஸ்ரீரங்கம் என்னும் திவ்வியதேசத்தினின்று வெளியேறுவது. உருவழகில் உயர்தர ஆங்கிலபத்திரத்தையொப்ப விளங்கும் இது, நம் தமிழணங்கு மகிழ்ந்துவிளையாடற்குச் சிறந்தகளமாக இனிஅமைந்து பயனளிக்குமென்றே நம்புகின்றேம். இத்தகைய பத்திரமொன்று நடாத்தத்துணிந்தவர், தமிழணங்கை அலங்கரித்தற்கெழுந்தவரேயாவர். ஆயின், அதன் வெளிநலங்களைப்போலவே உள்ளுறைநலங்களையுங் குறைவின்றிப் போற்றுதல் அவர்தம் கடனும். பத்திரவுள்ளுறைகள் பெரும்பான்மையும் நன்கமைந்துள்ளன. பத்திரத்தொடக்கத்தில் ஆசாரியனையும், அரசனையும் வாழ்த்திப் புகுந்திருத்தல் புகழத்தக்கதேயாகும். இதனை அன்போடும் எமக்கனுப்பிய பத்திராதிபரவர்கட்கு நன்றிகூறுகின்றேம். 100-பக்கமுடைய இப்பத்திரிகையின் வருஷசந்தா ரூ 5-தான். இதுபெறவிரும்புவோர் "மானேஜர், ஸ்ரீவாணீவிலாஸினீ, ஸ்ரீரங்கம்" என்றெழுதிப் பெறுதல்வேண்டும்.

---

நன்னூல் இலகுபோதம் ;—இப்பெயர்வாய்ந்த புத்தகமொன்று வெளியேறியிருத்தல், இலக்கணப்பயிற்சி விரும்பும் மாணவர்க்கு இன்பந்தரத்தக்கதாம். ஓராண்டிற்கு முன்பு, நன்னூல் எழுத்ததிகாரத்துக்கு மட்டும், இலகுபோதமொன்று யாழ்ப்பாணம் ஸ்ரீமத்-முத்துதம்பிப் பிள்ளையவர்களால் இயற்றி வெளியிடப்பெற்றது.

அப்பிள்ளையவர்களே, அந்நூற் சொல்லதிகாரத்துக்கும் அவ்வாறொன்றெழுதித் தனிப்புத்தகமாக இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். இப்புத்தகம், தான்பெற்ற பெயர்க்கேற்ப, இலக்கணத்துறைச் செல்வோர் நல்லவறிவை எளிதிற்பெறுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இது, மாணாக்கர்வருத்தமின்றிக் கற்குமாறு வினாவும் வினாவுக்கேற்ற விடையும் நிறுவி, அவற்றோடு ஏற்றவாறு சூத்திரங்களும் உரையும் உதாரணங்களுந்தந்து மயக்கந்தருமிடங்களை நன்குவிளக்கி எழுதப்பட்டுள்ளது. விலாசம்:—"ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள், நாவலர்கோட்டம், யாழ்ப்பாணம்."

பத்திராசிரியர்.